பக்கங்கள் : பன்னிரண்டு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 10 திங்கட்கிழமை (23.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :57

"என்னை நம்புங்கள்; சமாதானத்தை எட்ட எனக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள்"

எங்கும் பேசத் தயார் என்கின்றார் ஜனாதிபதி

பிரபாவுடன் என்றால் தாமே நேரில் வருவாராம்

'உதயன்', 'சுடர் ஒளி'க்கு அவர் நேற்றிரவு பிரத்தியேக செவ்வி

கொழும்பு, ஜனவரி 23

"என்னை நம்புங்கள். நான் தமிழ் மக்களுக்கு உண்மையாக நடக்க விழைகிறேன். சமாதானத்தை ஈட்ட எனக்கு ஒரு வாய்ப்பளியுங்கள். நான் ஒரு யதார்த்தவாதி என்பதைக் காட்ட என்னுடன் இணைந்து செயற்பட வாருங்கள்" - இப்படித் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் ஒரு பகிரங்க அழைப்பும், கோரிக்கையும் விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்றிரவு 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியருக்கு அலரி மாளிகையில் வைத்துப் பிரத்தியேக செவ்வி ஒன்றை வழங்கி அரசியல் நிலைவரம் குறித்துக் கலந்துரையாடித் தகவல் வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஐஸ்லாந்தோ, தென்னாபிரிக்காவோ, சுவிற்ஸர்லாந்தோ எங்கு சென்றும் புலிகளுடன் பேச அரசு தயார். புலிகளின் தலைவர் பிரபாகரனுடன்தான் நேரில் பேசித் தீர்க்க வேண்டும் என்றால் அதற்கு நானே நேரில் வந்து பேசவும் தயாராக இருக்கிறேன்.

"அது வன்னி என்றாலும் சரி - வேறு எந்த இடம் என்றாலும் சரி. அப்படி ஒரு பேச்சுக்குத் தேவைப்பட்டால் தமது பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தலைவர் பிரபாகரன் எங்கு சென்று பேசவும் உறுதியான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்" - என்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் நாட்டில் வந்து இறங்க விருக்கும் சமயத்தில் இத்தகைய தகவல்களை ஜனாதிபதி வெளியிட்டிருப்பது மிக முக்கியமானதாகும். சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு மேலும் வாய்ப்பளிக்கும் விதத்தில் அவரது கருத்துகள் இச்சமயத்தில் வெளியிடப்பட்டன.

"புலிகளுடனான பேச்சை எந்த நாட்டிலும் வைத்துக்கொள்ளலாம்" - என்று குறிப்பிட்ட ஜனாதிபதி "அது தென்னாபிரிக்காவோ, ஐஸ்லாந்தோ, சுவிற்ஸர்லாந்தோ அல்லது வேறு ஐரோப்பிய நாடாகவோ இருக்கலாம்" - என்று விவரித்தார்.

"அப்படியானால் நோர்வே....?" என்று கேள்வி எழுப்பியபோது -

(12ஆம் பக்கம் பார்க்க)

சேந்தாங்குளம் கடலில் நேற்றும் குண்டுச் சத்தம்!

இளவாலை,ஜன.23

மாதகல்சேந்தாங்குளம் கடற்பகுதியில் நேற்றிரவு 7.15 மணிமுதல் சுமார் அரை மணிநேரம் பாரிய குண்டுச்சத்தங்கள் கேட்டன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

குண்டுச்சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து 'பரா' வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன. எனினும் இதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் எதனையும் உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

கடலில் கேட்ட வெடிச்சத்தங்களை அடுத்து கரையோரப் பகுதிகளில் பதற்றம் உருவானது.

இதேவேளை- கடந்த வெள்ளிக்கிழமை மாலையும் சேந்தாங்குளம் கடற்பகுதியில் நடமாடிய படகுகள் மீது தாம் தாக்குதல் நடத்தியதாக கடற்படை வட்டாரங்கள் கூறியிருந்தமை தெரிந்ததே. (எ-8)

பேச்சை ஜெனீவாவில் நடத்த யோசனை தெரிவிக்கிறது அரசு

தலைவர் பிரபா - மதியுரைஞர் பாலா அது குறித்து இன்று ஆலோசிப்பர்

கொழும்பு,ஜன. 23

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உத்தேச முதலாவது சுற்றுப் பேச்சுகளை சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் நடத்தலாம் என்ற யோசனையை அனுசரணைத் தரப்பான நோர்வே ஊடாக இலங்கை அரசு விடுதலைப் புலிகள் தரப்புக்குத் தெரியப்படுத்தியிருப்பதாக அறிய வருகின்றது.

இன்று வன்னிக்குச் செல்லும் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம், இன்று காலையில் தலைவர் பிரபாகரன் மற்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரைச் சந்திக்கும்போது இவ்விடயம் குறித்துத் தலைவர் பிரபாகரனுடன் மந்திராலோசனை நடத்தி ஒரு முடிவை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளைமறுதினம் நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியும் அந்நாட்டின் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மை வன்னியில் சந்திக்கும்போது இவ்விவகாரம் தொடர்பான தனது முடிவை தலைவர் பிரபாகரன் எரிக் சொல்ஹெய்மிடம் தெரியப்படுத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெனீவாவில்பேச்சு நடத்தலாம் என்ற தமது யோசனையைத் தனது அதிகாரிகள் மூலம் நோர்வேக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரியப்படுத்தியிருக்கிறார் எனத் தெரிகின்றது.

இந்த யோசனையை விடுதலைப் புலிகளும் ஏற்கக்கூடும் என்று நோர்வே மற்றும் ஸ்ரீ லங்கா அரசுத் தரப்பு ஆகியன எதிர்பார்ப்பதாகக் கொழும்பு கொள்கை வகுப்பாளர்கள் கூறியுள்ளனர்.

மேலும், யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுகளை நடத்துவதற்கு முன் நிபந்தனையாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்தான துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதக் களைவு தொடர்பில் விடுதலைப் புலிகள் வலியுறுத்தக்கூடும் என்றும் ஸ்ரீலங்கா தரப்பினர் எதிர்பார்க்கின்றனர் என்றும் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

சொல்ஹெய்முக்கு 3 மணி நேரம் முன்னதாக பாலா தம்பதியர் அதிகாலையில் வந்துசேருவர்

கொழும்பு, ஜன.23

நேற்றுக்காலை லண்டன் நேரப்படி 10 மணியளவில் (இலங்கை நேரப்படி மாலை 4 மணியளவில்) ஹீத்ரோ விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் இன்று அதிகாலை 3 மணியளவில் கொழும்பு கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அங்கு விமான நிலையத்தில் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் அவர்களை வரவேற்று பாதுகாப்பாகத் தங்கவைக்கும் ஒழுங்குகளை இலங்கை அதிகாரிகளோடு சேர்ந்து கவனிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விமானத்திலிருந்து இறங்கும் சமயமே குடிவரவு, குடியகல்வு விதிமுறை நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு, விமான நிலையத்தை ஒட்டிய ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்படுவதற்காக பாலா தம்பதியர் கூட்டிச் செல்லப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடிந்த பின்னர் - காலை 7 மணிக்குப் பின்னர் - கட்டுநாயக்கவிலிருந்து விமானப் படையினர் விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சிக்கு பாலசிங்கம் தம்பதியர் அழைத்துச் செல்லப்படுவர்.

அவர்களது அந்தப் பயணத்துக்கு வழித்துணையாக நோர்வேத் தூதரக உயரதிகாரிகளும் ஹெலிகொப்டரில் சேர்ந்து பயணம் செய்வர் என்றும் -

கிளிநொச்சிவரை பாலா தம்பதியரைக் கூட்டிச்சென்று அங்கு பாதுகாப்பாக இறக்குவது வரையான ஏற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் அவர்கள் உறுதிப்படுத்துவார்கள் என்றும் - கூறப்பட்டது.

இதேவேளை -

பாலசிங்கம் தம்பதியர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கி மூன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு ஈடுகொடுக்க முடியாது என்பதற்காக அரசு பேச்சுக்குப் போகிறது எனக் கருதாதீர்கள்!

அமைதி வழியில் தீர்க்கவே அந்த முயற்சி என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜன.23

"இராணுவ ரீதியில் எங்கள் படைகள் வலிமையாக இருக்கின்றன. புலிகளுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் தான் அரசு அமைதிப் பேச்சுகளுக்குச் செல்கிறது என்று எவரும் தவறாக நினைக்கக் கூடாது. பரஸ்பர நம்பிக்கை வைத்து அமைதிப் பேச்சுகள் மூலம் பிரச்சினைகளை தீர்க்கலாமென நான் உறுதியாக நம்புகிறேன்." -என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அசோஸியேட்டட் பிரஸ் செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார். அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இன்று இலங்கை வரும் நிலையில் நேற்று மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, புலிகளுடன் பேச்சுகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

அலரிமாளிகையின் தனி அறையொன்றில்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொடிகாமம் மத்திய பஸ் நிலையம் நேற்று வைபவ ரீதியாகத் திறப்பு

சாவகச்சேரி,ஜன.23

கொடிகாமம் மத்திய பஸ் நிலையம் நேற்று நண்பகல் யாழ்.அரச அதிபர் க.கணேஸினால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

முன்னதாக அரச அதிபர் மற்றும் விருந்தினர்கள் அருகில் உள்ள பிரதேச சபையின் அலுவலகக் கட்டடத்தில் இருந்து சாவக்சேரி பிரதேச சபையின் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் மற்றும் உத்தியோகத்தர்களால் புதிய பஸ் தரிப்பு நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து யாழ்.அரச அதிபர் கணேஸ் பஸ் நிலையத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

பஸ் நிலையத்தின் நினைவுப் பெயர்ப் பலகையை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி வசந்தகுமார் திரை நீக்கம் செய்து வைத்தார். பஸ் நிலைய மேல் மாடியின் இரு வாயில்களையும் முறையே தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், மத்திய போக்குவரத்துச் சபையின் யாழ். நிறைவேற்று முகாமையாளர் எஸ்.கமலநாதனும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. மங்கள விளக்கினை யாழ். அரச அதிபர் கே.கணேஸ் உட்பட மற்றும் பலரும் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வுகள் சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் ஆரம்பமாகின.

நிகழ்வின் வரவேற்புரையை சாவகச்சேரி பிரதேச சபையின் பிரதம எழுதுநர் எஸ். சிவராசா நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ். அரச அதிபர், போக்குவரத்துச் சபையின் நிறைவேற்று முகாமையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தென்மராட்சி பிரதேச செயலர், ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் உரை நிகழ்த்தினர். நன்றியுரையை டாக்டர் எஸ்.ஜெயநாமகணேசன் நிகழ்த்தினார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் செயலாளர் க.சிவராசா, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி உட்பட வர்த்தகர்கள், பொதுமக்கள், பயணிகள், அரச உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நேற்றுமுதல் புதிய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து யாழ். - முகமாலை, பருத்தித்துறை - முகமாலை பகுதிகளுக்கான பஸ் சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

(எ-31-170)

கலந்துரையாடல்

பரந்தன்,ஜன.23

கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதார மேம்பாடு தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தமிழீழ நிர்வாக சேவை மாவட்ட பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைப் பிரிவின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

(எ-6-352)

நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு பரீட்சை மாதிரி வினாத்தாள்

எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குரிய மாதிரி வினாப் பத்திரம் நாளைய உதயனில் வெளியாகும். விரைவில் நடைபெறவுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கும் இந்த மாதிரி வினாத்தாள் ஏற்புடையது.

தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதி; நேர்முகப்பரீட்சைக்கு செல்லாதோருக்கு

யாழ்ப்பாணம்,ஜன.23

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடநெறிகளை ஆங்கில மொழிமூலம் கற்க விண்ணப்பித்து, நில்வள (துக்குறக) சியன கல்வியியற் கல்லூரிகளுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு போக்குவரத்து இடைஞ்சல் காரணமாக பலர் செல்லவில்லை என்று அறியவந்துள்ளது. அவ்வாறு செல்ல முடியாதவர்கள் அல்லது செல்லாதவர்கள் இன்று திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். தேசிய கல்விக் கல்லூரியில் (கோப்பாயில்) கூடுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மாற்று ஒழுங்குகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இந்தச் சந்திப்பில் கலந்து பேசப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

கொடிகாமம் மத்திய பஸ் நிலையத் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. முதலாவது படத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஸ்- பஸ் நிலையத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதைக் காணலாம். சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் கு.பாலச்சந்திரன், தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி வசந்தகுமார் ஆகியோரும் இந்தப் படத்தில் உள்ளனர். தொடர்ந்து பஸ் நிலைய நினைவுக் கல் திறந்து வைக்கப்படுவதையும் - திறப்பு விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும், பஸ் நிலை யத்தின் முகப்புத் தோற்றத்தையும் முதலாவது சேவையை நடத்த பஸ் ஒன்று தயார் நிலையில் நிற்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *[படங்கள் : சாவகச்சேரிச் செய்தியாளர்]*

ஹட்டனில் சுற்றிவளைப்பு 60 பேர் தடுத்து வைப்பு

ஹட்டன் நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் நேற்றுக்காலைமுதல்மாலைவரைபொலீஸார் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இத்தேடுதல்களின் போது சந்தேகத்தின் பேரில் 60க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா, தலவாக்கலை ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்த சகல வாகனங்களையும் குடா ஓயா பிரதேசத்தில் வைத்தும் -

கொழும்பு, கண்டி ஆகிய பகுதிகளிலிருந்து வந்த வாகனங்களை மல்லிகைப்பூச் சந்தியில் வைத்தும் - பொகவந்தலாவை, மஸ்கெலியா போன்ற பகுதிகளிலிருந்து வந்த வாகனங்களை டிக் கோயா, அலுத்கால சந்தியிலும் வைத்தும்-

பொலீஸார் குடைந்து குடைந்து சோதனையிட்டனர். அப்போது சந்தேகத்துக்கிடமான வர்களைப் பொலீஸார் தடுத்து வைத்தனர்.

இத்திடீர் சோதனையில் ஹட்டன் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலீஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் ஈடுபட்டனர்.

இச்சோதனை, சுற்றிவளைப்புகளினால் ஹட்டன் நகருக்குச் சென்ற பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். (எ-க)

தென்னம்பிள்ளை விநியோகம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் தென்னை மீள் நடுகை மானியத் திட்டத்தில் 2ஆயிரம் தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் தென்னைப் பயிர் செய்கைச் சபையினால் இந்தத் தென்னம் பிள்ளைகள் இலவசமாக பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.அவை மக்கள் மீளக்குடியமர்வுப் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய 56 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா மூன்று தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்கப்பட்டன. (ஐ-117)

ஜெயசூரிய திடீர் அதிரடி விளாசல்; ஆஸியைக் கவிழ்த்தது இலங்கை!

சிட்னி,ஜன. 23

காயத்திலிருந்து மீண்டு வந்த சனத் ஜெயசூரிய திடீர் எழுச்சி பெற்று விளாசி ஓட்டங்களைக் குவித்ததில் உலகச் சம்பியனான ஆஸ்திரேலிய அணியை 51 ஓட்டங்களால் வீழ்த்தி பெரும் வெற்றியை ருசித்தது இலங்கைக் கிரிக்கெட் அணி.

வி.பி. கிண்ணத் தொடரின் ஐந்தாவது ஆட்டம் நேற்று சிட்னி மைதானத்தில் நடைபெற்றது. உலகச் சம்பியனும் இலங்கை அணியும் மோதின.

இலங்கை அணி வீரர்கள் பந்து வீச்சு, களத்தடுப்பு, துடுப்பாட்டம் என்று அனைத்துத் துறைகளிலும் தமது முழுத் திறமையை வெளிப்படுத்தி வெற்றியைத் தமதாக்கினர்.

நியூஸிலாந்து தொடரின்போது குளியலறையில் வழுக்கி வீழ்ந்ததால் காயமடைந்த சனத் ஜெயசூரிய இந்தத் தொடரின் ஆரம்ப ஆட்டங்களில் பங்குபற்றவில்லை. இரு நாட்களுக்கு முன்பே அவர் ஆஸ்திரேலியாவிற்கு வந்து அணியுடன் இணைந்திருந்தார். இந்தத் தொடரில் அவர் பங்குபற்றிய முதல் ஆட்டம் இது.

ஆரம்பத் துடுப்பாளராக முபாரக்குடன் களமிறங்கிய சனத், தனது துடுப்பை நாலா புறமும் திருப்பி, வயதுபோனாலும் தனது ஆட்டம் சோடை போகவில்லை என்பதை மீண்டும் ஒரு தடவை சிட்னியில் நிரூபித்தார். 96 பந்துகளை எதிர்கொண்டு 114 ஓட்டங்களை அவர் விளாசினார். அவற்றில் 10 பவுண்டரிகளும் 4 சிக்ஸர்களும் அடக்கம். அவரது 19ஆவது சதம் இதுவாகும்.

சுழற் பந்துவீச்சாளர் மலிங்க பண்டாரதன் பங்குக்கு 58 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைவீழ்த்த ஆஸ்திரேலிய அணி இலங்கையின் முன்பாக மண்டியிட்டது.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மாவன் அத்தப்பத்து, தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார். ஆட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே இலங்கை அணியின் கை ஓங்கியிருந்தது.

இலங்கையின் முன்னணித் துடுப்பாளர் [illegible] (78), மஹேல ஜெயவர்தன (54), அத்தபத்து (31) ஆகியோர் பொறுப்புடன் ஆட 50 ஓவர்கள் முடிவில் 309 ஓட்டங்கள் என்ற பெரும் எண்ணிக்கையை எட்டியது அணி. இதில் சனத் ஜெயசூரியவும் சங்கக்காரவும் 163 ஓட்டங்களை இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாகக் குவித்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி சார்பில் மைக்கல் கிளார்க் மற்றும் சைமன்ஸ் ஆகியோர் இடையில் 10 ஓவர்களில் 73 ஓட்டங்களை விளாசினர். எனினும் சைமன்ஸ் துரதிர்ஷ்டவசமாக டில்ஷானால் ரன் அவுட் செய்யப்பட அந்த ஜோடியின் இணைப்பாட்டம் முடிவுக்கு வந்தது. அவர் ஆட்டமிழந்து சென்றபின் வெறும் 4 ஓட்டங்கள் மட்டுமே அணி அதிகமாகப் பெற்றிருக்கையில் கிளார்க்கும் பண்டாரவின் பந்தில் முரளியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அத்துடன், ஆஸி. அணியின் ஆட்டம் தோல்வியை நோக்கிச் சரிய ஆரம்பித்தது.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இலங்கை பெற்ற இரண்டாவது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதே ஆடுகளத்தில் 3 வருடங்களுக்கு முன்னர் நடந்த வி.பி. கிண்ணத் தொடரில் இலங்கை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 349 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஆட்டத்தில் - தனது முதலாவது சர்வதேச ஆட்டத்தில் - 94 ஓட்டங்களைக் குவித்த பில் ஜக்ஸ் இலங்கைக்கு எதிரான அணியில் நேற்றுச் சேர்க்கப்படவில்லை. கட்டிச் அணிக்குத் திரும்பியிருந்ததால் அவர் விலக்கப்பட்டார்.

ஆட்டநாயகனாக ஜெயசூரிய தெரிவானார்.

(6)

பாகிஸ்தான் வலுவான நிலையில்!

பைசலாபாத், ஜன.23

இன்சமாம் உல்-ஹக் மற்றும் சயிட் அப்ரிடி இருவரும் விளாசிய சதங்களின் உதவியுடன் பாகிஸ்தான் அணி, பைசலாபாத்தின் முதல் இன்னிங்ஸில் 38 ஓட்டங்களைக் குவித்துள்ளது. பதிலளித்தாடிய இந்திய அணி ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 110 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பாகிஸ்தான்-இந்தியா கிரிக்கெட் அணிகள் இடையே நடந்துவரும் டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் பைசலாபாத் மைதானத்தில் ஆரம்பமானது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதல் நாள் ஆட்டத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 379 ஓட்டங்களைப் பெற்றது. அதில் யுனிஸ்கான் 83 ஓட்டங்களையும் மொகமட் யூசுப் 65 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

முதல் நாள் ஆட்டம் நிறைவடைந்த போது சயிட் அப்ரிடி 85 ஓட்டங்களுடனும் இன்சமாம் உல்-ஹக் 79 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டத்தை அப்ரிடியுடன் அப்துல் ரசாக் ஆரம்பித்தார். இன்சமாம் உடல்நிலை சரியிலலாததால் ஆட்டத்தை தொடரவில்லை. அப்ரிடியின் ஆட்டத்தில் அனல்பறந்தது. அவர் 128 பந்துகளில் 156 ஓட்டங்களை விளாசி தனது டெஸ்ட் வாழ்க்கையில் சிறந்த பெறுபேற்றை பெற்றார்.

அவரது 156 ஓட்டங்களில் 20 பவுண்டரிகளும் ஆறு சிக்சர்களும் அடங்கும். அதன் பின்னர் வந்த கம்ரன் அக்மல் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார்.

அதன்பின்னர் மீண்டும் ஆடவந்த இன்சமாம் அப்துல் ரசாக்குடன் இணைந்தார். பொறுமையாக ஆடித் தனது 25 ஆவது சதத்தைப் பூர்த்திசெய்தார். இந்திய அணியின் பயிற்றுவிப்பாளரான கிரேக் சப்பலின் 24 சதங்கள் என்ற மைல்கல்லை இதன் மூலம் இன்சமாம் கடந்தார்.

இறுதியில் இன்சமாமுடன் இணைந்த அக்தர் அதிரடியாக ஆடி 54 பந்துகளில் 3 சிக்சர்களுடன் 47 ஓட்டங்களைக் குவித்தார். அவரது டெஸ்ட் வாழ்க்கையில் அவர் பெற்ற ஆகக்கூடுதலான ஓட்டங்கள் இவை.

இறுதியில் பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 588 ஓட்டங்களைப் பெற்றது. இன்சமாம் 119 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இந்திய அணியின் புதுமுக வேகப் பந்துவீச்சாளரான ஆர்.பி.சிங் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆட்டநேர முடிவில் இந்திய அணி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 110ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மூன்றாவது நாள் ஆட்டம் இன்று தொடரும்.

(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

நீதி செலுத்த முடியாத தலைமை

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை, தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள், தமிழர்கள் வகைதொகையின்றிக் கைது செய்யப்படுகின்றமை, அப்பாவித் தமிழர்கள் கொலை செய்யப்படுகின்றமை போன்ற விவகாரங்கள் குறித்து அரசு கிஞ்சித்தும் கவனம் செலுத்தவில்லை என நான்கு தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன், மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் ஒப்பமிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அடிப்படையில் நோக்கும்போது தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகியன அதற்குள் அடங்குகின்றன. அவற்றோடு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகியன இணைந்திருப்பதால் மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும், விடயங்களும் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கருத்துகளாகக் கொள்ளத்தக்கவை.

இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காணப் போகிறார் எனக்கூறிவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மறுபுறத்தில் தமிழர்களின் தரப்பிலிருந்து - அவர்களது ஜனநாயகவழி மிதவாதத்தலைமைகளிடமிருந்து - வந்திருக்கும் இந்தக்குற்றச்சாட்டுகள் குறித்து விசேட கவனம் அளிக்கவும், உரிய பதில் தரவும் கடமைப்பட்டுள்ளார்.

தமிழர்களுக்கு எதிரான படை நடவடிக்கைகளை - அரச பயங்கரவாதப்போக்கை - தமக்குக் கெட்ட பெயர் வேண்டித் தரவேண்டும் என்பதற்காக பாதுகாப்புத் தரப்புக்குள் இருக்கும் சிலர் மேற்கொள்கின்றனர் என்று சாக்குப்போக்கு விளக்கம் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த கூறிவருகிறார் என சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. இதே கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை நேரில் சந்தித்தபோதும் அவர் கூறியிருக்கிறார்.

இப்படி விட்டேத்தியாகப் பதில் கூறி, பொறுப்புகளிலிருந்து அவர் தப்பிக்கொள்ளமுடியாது.

அவரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி; முப்படைகள் மற்றும் பொலிஸாரின் தளகர்த்தர்; நாட்டுக்கும், அரசுக்கும், அமைச்சரவைக்கும் தலைவர். தமது செயற்பாடு குறித்து நீதிமன்றினால் கூட கேள்வி எழுப்ப முடியாத, வானளாவிய அதிகாரங்களைக் கொண்ட தனித்துவப் பதவியில் இருப்பவர்.

இத்தனை அதிகார வலுவுடன் இருக்கும் ஒருவர் தமது படைகளின் அரச பயங்கரவாதச் செயல்களைத் தமக்குக் கெட்ட பெயர் தேடித்தரும் சில சக்திகளின் கைவரிசை என்று சாக்குப் போக்குக் காரணங்களைக் கூறி விமர்சித்துவிட்டு வாளாவிருக்க முடியாது. தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த சக்திகளை அடக்கி ஒடுக்கவும், தமிழர்களுக்கு எதிரான அரச படைகளின் பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்தவும் தாம் எடுத்துள்ள உறுதியான - திடமான - நடவடிக்கைகள் எவை என்பதை தமிழர் தரப்புக்கு வெளிப்படுத்திக் காட்டுவதன் மூலம் தமது நியாயப்போக்கை பிரதிபலிக்கச் செய்யவேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு.

உதாரணத்திற்கு இரத்தத்தை உறைய வைக்கும் விதத்தில் - மிக நெருக்கமாக நின்று - ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்களை துடிக்கத்துடிக்கத் தலையில் சுட்டுக்கொன்ற படுபாதகக் கொடூரத்தை எடுத்துக் கொள்வோம்.

இந்தக் கோரக் கொலைகளைச் செய்தவர்கள் யார் என்பது இலங்கை ஜனாதிபதி மஹிந்தவின் நெஞ்சுக்கே - மனச்சாட்சிக்கே - நன்கு தெரியும்.

அது தொடர்பில் அவர் எடுத்த நடவடிக்கை என்ன? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களைப் பார்த்து விசேட அதிரடிப்படையினரே இந்தக் கொடூரத்தைப் புரிந்திருக்கிறார்கள் என்று பொறுப்பற்ற விதத்தில் பதில் தந்ததோடு சரி.

சந்தேகத்தின் பேரில் ஒருவராவது கைது செய்யப்பட்டாரா? யாராவது நீதிமன்றின் முன்னால் நிறுத்தப்பட்டனரா? மரண விசாரணை நடந்ததைத் தவிர மேலதிகமாக ஏதேனும் ஆக்கபூர்வமான புலன்விசாரணை நடந்ததா? தன்னுடைய அனுமதியின்றி - தனக்குக் கெட்ட பெயர் தேடித் தரும் நோக்குடன் - திருகோணமலைக்கு அனுப்பப்பட்ட விசேட அதிரடிப்படையினரே இந்தப் படுகொலையைப் புரிந்தனர் எனக்கூறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அப்படி விசேட அதிரடிப்படையினரை அங்கு அனுப்பிவைத்தவர்கள் மீதாவது ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா? இந்த ஐந்து மாணவர்களும் படைத்தரப்பினால் மிக நெருக்கமாகத் தலையில் துப்பாக்கி வைத்துச் சுட்டுக்கொலை செய்யப்பட்ட நிலையில், அந்த ஐந்து மாணவர்களும் படையினரைத் தாக்கக் கொண்டு வந்த கிரனேட் வெடித்தே அவர்கள் உயிரிழந்தனர் என்று சம்பவம் நடந்தவுடன் செய்திகளை வெளியிட்டுப் பரப்பி, கதையைத் திரித்து, படுகொலைகளை மூடிமறைக்க முயன்ற அரச அதிகாரிகள் மீதாவது நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா?

இல்லவே இல்லையே!

இவ்வாறு தனது படைகளைத் தனது கட்டுப்பாட்டில் இயக்கவக்கில்லாமல் கையை விரிக்கும் ஒரு ஜனாதிபதியால் நாட்டைச் சரிவர நிர்வகிப்பதோ, துணிச்சலுடன் செயல்பட்டு இனப்பிரச்சினைக்கு நியாயமான - நிரந்தரமான - நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய - தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவதோ சாத்தியப்படப் போவதில்லை என்பது நிச்சயம்.

இந்தியாவிடம் இராணுவ உதவி கோரவில்லை தார்மீக ஆதரவையே எதிர்பார்க்கிறோம்!

அரசியல விவகார அமைச்சர் குணசேகர சென்னையில் பேட்டி

சென்னை, ஜன.23

இந்தியாவிடம் இராணுவ உதவி கேட்க வில்லை. தார்மீக ஆதரவை மட்டுமே எதிர்பார்க்கிறோம்.

இலங்கை அரசமைப்பு, சட்ட விவகார அமைச்சர் டியு குணசேகர இவ்வாறு சென்னையில் தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களுக்கு சனிக்கிழமை அவர் செவ்வி அளித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே அமைதிப் பேச்சு வார்த்தையில் நோர்வேக்குப் பதிலாக இந்தியா சமரச முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று இலங்கை அரசு ஒரு போதும் விரும்பவில்லை.

இலங்கை ஒரே நாடாக இருக்கவேண்டும். பிரிவினை கூடாது என்பதே இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளின் கருத்தாக உள்ளது. இதுவே எங்களுக்குப் போதும்.

இராணுவ உதவி கேட்க இலங்கை அதிபர் ராஜபக்ஷ இந்தியா வந்தார் என்ற செய்தி தவறானது.

இலங்கை அதிபர் தமிழக முதல்வரைச் சந்திக்கும் நிகழ்ச்சி கடைசி நேரத்தில் ரத்தாகி விட்டது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

தமிழகத்தில் நிலவும் அரசியல் காரணங்களுக்காக இச்சந்திப்பு ரத்தாகியிருக்கலாம். ஆனால், எங்களது அதிபர் தமிழக முதல்வரைச்சந்திக்க ஆர்வத்துடன் இருந்தார்.

அமைதி திரும்பவேண்டும் என்பதில் இலங்கை அதிபர் மிகவும் விருப்பமாக உள்ளார். ஆனால், விடுதலைப் புலிகள் தொடர்ந்து அத்துமீறி செயற்பட்டு வருகின்றனர்.

தற்போது போர் மூளும் சூழல் ஏற்பட்டுள்ளதற்கு புலிகளே காரணம். தமிழர்களிடம் விடுதலைப் புலிகளுக்கு உள்ள செல்வாக்குப் படிப்படியாக குறைந்து வருவதால்தான் அவர்கள் போரைத் தூண்ட முயற்சிக்கின்றனர். போர் வந்தால் தமிழ் மக்கள் அவர்கள் பக்கம் சாய்வார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். ஏற்கனவே ஏராளமான வீரர்களை அவர்கள் இழந்து விட்டனர்.

போர் மூளும் சூழலைத் தடுக்க இலங்கை அரசு எல்லா நடவடிக்கைகளும் எடுத்துள்ளது - என்றார் குணசேகர. (ஐ)

யுத்தகால அமைச்சரவையை உருவாக்குகின்றார் மஹிந்த?

கொழும்பு, ஜன.23

யுத்தகால அமைச்சரவை ஒன்றை உருவாக்கும் திட்டத்துடன் ஜனாதிபதி செயற் பட்டுவருகின்றார்.

இவ்வாறு கொழும்பு செய்தி வட்டாரங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த சில நாள்களாக கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து வருகின்றனர்

மஹிந்தவின் நண்பரான மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலித் அலுவிகார மற்றும் அவரது மகன் ரஞ்சித் அலுவிகார ஆகியோர் மஹிந்தவை அண்மையில் சந்தித்தனர். தம்மைச் சந்திக்கும் ஐக்கிய தேசியக் கட்சி நண்பர்களிடம், விடுதலைப் புலிகள் யுத்தத்தை தொடங்கினால் யுத்தகால அமைச்சரவையை தாம் அமைக்க உள்ளதாகவும் அப்போது உங்களுக்கு பணிகள் கொடுக்கப்படும் என்றும் மஹிந்த கூறியுள்ளார். இந்த யுத்தகால அமைச்சரவையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முக்கிய பங்காற்றக்கூடும் என்றும் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கொழும்பு செய்தி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'இனையத்தளம்' ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

இனப்பிரச்சினைக்கு விரைவில் சமஷ்டித் தீர்வு காணுமாறு வர்த்தக பிரமுகர்கள் வற்புறுத்து

கொழும்பு,ஜன.23

கடந்த பல சகாப்தகாலமாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக நாட்டை சமஷ்டி நிர்வாக ஆட்சிமுறைக்கு மாற்றுமாறு இலங்கை வர்த்தகத்துறைத் தலைவர்கள் அரசாங்கத்திடம் கேட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக வர்த்தக சம்மேளனம் சார்பில் அறிக்கை ஒன்று கொழும்பில் விடுக் கப்பட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுதந்திர தமிழீழத்திற்குப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக இந்திய சமஷ்டி முறைமையை ஒரு முன்மாதிரியாகக் கொள்ளமுடியும்.

இந்திய முன்மாதிரியில் அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கம் முன்மொழியப்படுகின்றது. இது ஐக்கிய அல்லது ஒன்றையாட்சி நாடு என்ற வரையறைக்குள் கட்டுப்படுத்தப்பட்டதல்ல.

சிக்கலான இந்தப் பிரச்சினை பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களுடனும், இந்த ஆக்கபூர்வமான வழி இது என வும் நாம் கருதுகின்றோம் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமாதானப்பேச்சுகளை உடன் ஆரம்பிப் பதற்கு நோர்வே சமாதான அனுசரணையாளர்களினால் மேற்கொள்ளப்படும் இராஜதந்திர நகர்வுகளுடன் சம்பந்தப் பட்டதாகவே இந்தக் கூட்டறிக்கை வெளி வந்துள்ளது. (ஐ)

குடும்பப் பெண்ணுக்கு எரிகாயங்கள்

தென்மராட்சி,ஜன.23

குப்பிவிளக்கு வெடித்ததில் குடும்பப் பெண் பலத்த எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்வம் நேற்றுமுன்தினம் இரவு நுணாவிலில் இடம்பெற்றது.

இந்த இடத்தைச் சேர்ந்த பிரபாகரன் கலாநிதி (வயது-30) என்னும் பெண்ணே உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சிறிய பாத்திரம் ஒன்றில் இருந்து பெற்றோலை மண்ணெண்ணெய் என நினைத்து விளக்குக்கு விட்ட போதே விளக்கு வெடித்து எரிகாயம் ஏற்பட்டதாகக் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

உதயவாக்கு

அறிவை புதையலாக்கிக் கொண்டவனுக்கு கள்வர்களின் அச்சம் அவசியமற்றதாகும்.

- சீராக்கின் ஞானம்- வில்லியம்.

நாளை

தை 11
செவ்வாய்க்கிழமை
24.01.2006
திதி: தசமி
பின்னிரவு: 4.53 வரை
நட்சத்திரம் : விசாகம்
பிற்பகல் : 3.14 வரை
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் :03.36 - 05.06
(யாவும் பழைய நேரப்படி)

தலாய்லாமா இங்கு வருவதை அனுமதிக்கவே முடியாதாம்!

கொழும்பு,ஜன.23

இலங்கையில் இடம்பெறும் புத்த ஜயந்தி நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக திபேத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா இங்கு வருவதற்கு தாம் ஆதரவுதர முடியாது என்று ஜாதிக ஹெல உறுமயவும். தேசிய பிக்கு முன்னணியும் தெரிவித்துள்ளன.

ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா பௌத்த மதத் தலைவர் என்ற ரீதியில் இங்கு வருவாரேயானால் அவரை வரவேற்க தாம் தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கும் இந்த அமைப்புகள். ஆனால், திபேத்தின் தலைவராக வரும் பட்சத்தில் அவரை வரவேற்க தாம் தயாராக வில்லை என வும் தெரிவித்துள்ளனர்.

ஆன்மீகத் தலைவரை இலங்கைக்கு விஜயம் செய்யும்படி மகாபோதி சங்கம் அழைப்பு விடுத்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

4ஆம் கட்டப் போருக்கு நாங்கள் தயார்...!

ஓமந்தை நுழைவாயிலில் பிரசுரங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.23

தென்னிலங்கையில் இருந்து வன்னிப்பெரு நிலப்பரப் புக்கு வரும் பயணிகள் உள்நுழையும் ஓமந்தை, இராணுவச் சோதனைச் சாவடியில் உள்ள பயணிகள் நடை பாதைகளில் சில துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட் டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பாயும் சிங்கத்தின் படத்துடன் கூடிய இந்தப் பிரசுரங்களில் '4ஆம் கட்டப் போருக்கு நாங்கள் தயார்' என்ற வாசகங்கள் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆண்கள், பெண்களுக்காகத் தனித் தனியாக உள்ள இரு பாதை வழிகளிலும் இவை ஒட்டப்பட்டுள்ளன. இந்த நடைபாதைகளிலேயே பொருள் மற்றும் உடற் பரிசோதனைகளும், பதிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பிரசுரங்களில் அடிக்குறிப்பு ஏதும் காணப்படவில்லை என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-88)

ஜி.சி.ஈ.உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஏப்ரலில் நடக்கும்

கொழும்பு,ஜன.23

2006 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார். எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 19 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் இப்பரீட்சை நடத்தப்படும்.

பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. எனினும்பரீட்சைக்குவிண்ணப்பிக்கும்வாய்ப்பை இழந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வுள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல்கள் இந்த வாரம் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் எப்போது வெடிக்கும் என்ற மன உளைச்சலுடன் படையினர்

கொழும்பு,ஜன.23

இலங்கையில் எப்போது மீண்டும் யுத்தம் வெடிக்கும் என்பது குறித்து சிறிலங்கா இராணுவத்தினர் கடும் மன உளைச்சலில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக 'இணையத்தளம்' ஒன்றில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது மாவீரர் நாள் உரையில் 2006 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கும் என்று அறிவித்தது முதல் ஊடகங்கள் பலவும் தாங்களே ஒரு காலக் கெடுவை நிர்ணயித்துக் கொண்டு கட்டுரைகளை எழுதின.

சில ஆய்வாளர்கள் கள நிலைமைகள், கடந்த கால யுத்தகாலங்கள், புலிகளின் விருப்பங்கள் என்பவற்றின் அடிப்படையிலும் ஆரூடங்களைக் கணித்துவந்தனர்.

இந்த நிலையில் கடந்த தைப்பொங்கல் பண்டிகையின் முடிவில் விடுதலைப் புலிகள் யுத்தத்தைத் தொடங்கிவிடுவார்கள் என்ற அச்சத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் முழு வீச்சில் யுத்தத்தை எதிர்நோக்கத் தயார்ப் படுத்தப்பட்டிருந்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர் யுத்தத்தை எதிர்கொள்ளும் வகையிலான முழுத் தயாரிப்புகளோடு உஷார்ப்படுத்தப்பட்டிருந்தனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்து கடந்த 4 ஆண்டுகளில் முதல் முறையாக இராணுவத்தில் இத்தகைய உஷார்நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது. யுத்த களத் தயாரிப்புகளில் கடைசி நிலை சிப்பாய் முதல் உயர்நிலை அதிகாரிகள் வரை தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

யுத்தகள உடைகளை அனைவரும் அணிந்து கொண்டனர். தாக்குதல் நடத்தப்பட்டால் எதிர்த்தாக்குதலை மேற்கொள்வதற்காக தளபாடங்களும் தயார் நிலையில் நிறுத்தப் பட்டிருந்தன.

அறிவிப்பு அறைகளும் செயற்பாட்டு அறைகளும் முழு வீச்சில் தயார்ப்படுத்தப் பட்டிருந்தன. சிறிலங்கா விமானப் படை விமானங்கள், புலிகளின் பிரதேசங்களில் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. யுத்த தாங்கிகளும் ஆட்லறிகளும் தயார்ப் படுத்தப்பட்டன.

யாழ். குடாநாட்டின் பலாலி தலைமையகம் இரவு நேர ஊரடங்கு உத்தரவை உடனே செயற்படுத்தியது. வடக்கின் மிகப் பிரதான இராணுவத்தளம் என்பதால் முழு உஷார் நிலையில் பலாலி விமானத்தளம் கண்காணிக்கப்பட்டிருந்தது. இத்தகைய இரவு நேர ஊரடங்கு உத்தரவுகள் யுத்த நிறுத்த ஒப் பந்தத்துக்கு முந்தைய காலங்களில் நாளாந்த நடைமுறையில் இருந்துவந்தன.

அரச படையணிகளுக்கான சங்கேத சொற்கள் பரிமாறப்பட்டன. இந்தச் சங்கேத சொற்கள் மாறி உச்சரிக்கப்படுகின்ற போது தாக்குதல் நடந்துவிட்டதாக கருதவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த சில வாரங்களாக சிறிலங்கா புலனாய்வுத் துறையினர். எந்த நேரத்திலும் புலிகள் கெரில்லாத் தாக்குதலை மேற்கொள்வார்கள் என்ற தகவல்களை அளித்து வருகிறார்கள்.

ஆனால், எதுவித தாக்குதல்களும் அப்படி நடைபெறவில்லை. அப்படியானால் இத்தகைய முன் எச்சரிக்கைகள் ஏன்? அரச படையினருக்கு விடுதலைப் புலிகள் எற்படுத்தியிருக்கும் மன உளைச்சல் நடவடிக்கையா என்று படைத்தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுவருகிறது.

அதேபோல் கொழும்பில் வெடிகுண்டு பஸ் ஊடுருவிட்டதாகவும் வதந்திகிளப்பி விடப்பட்டது. வர்த்தகமையங்களைத்தாக்கப் போவதாகவும் கல்வி நிறுவனங்களைத் தாக்கப் போவதாகவும் 5 ஆயிரம் புலிகள் ஊடுருவிகொழும்பை ஆக்கிரமித்துவிட்டதாகவும் வதந்திகள் நாளாந்தம் எழுப்பப்பட்டுவருகின்றன.

இதனால் கொழும்பில் தனியார் நிறுவனங்கள் பல ஊழியர்களை பல மாத விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பிவருகின்றன.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தும் இத்தகைய வதந்திகளைப் பரப்புவோர் மீது ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வில்லை என்று சிறிலங்கா இராணுவத்தினர் கேள்வி எழுப்பினாலும் சிறிலங்காவின் உயர்நிலை அதிகாரிகளே இத்தகைய வதந்திகளை உருவாக்கி வருகின்றனர் என்ற உண்மையால் சிறிலங்கா அரச படையினர் உச்சபட்ச யுத்த மன உளைச்சலுக்குள்ளாகி இருக்கின்றனர் என்கின்றனர் கொழும்பு ஊடக வியலாளர்கள்.

- இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஐ)

மரண அறிவித்தல்

திருமதி சிவநாயகி சிவராஜா

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி சிவநாயகி சிவராஜா அவர்கள் நேற்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் Dr.T.சிவராஜா (Retd DRMO, Jaffna) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற Dr.கனகரத்தினம் - தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான Dr.K. சிவஞானரத்தினம் (Retd SHS ,Jaffna), C.K.கந்தசாமி (Retd Principal, Kokuvil Hindu College) அவர்களின் சகோதரியும் ஆனந்தியின் தாயாரும், Dr. அரியநாயகத்தின் (India) மாமியும் சுமங்கலி, கோகுலன், அஞ்சலியின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

727, K.K.S. Road,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (45899) (39-11-45)

தகவல்:
திருமதி முகுந்தினி சிவபாதம்
(மருமகள்).

மரண அறிவித்தல்

திருமதி சுந்தரேஸ்வரசர்மா ஜெயலஷ்மி அம்மா

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரேஸ்வரசர்மா ஜெயலஷ்மி அம்மா அவர்கள் 21.01.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியக் குருக்கள்-அமிர்தேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், இரத்தின ஐயர்- மனோன்மணி அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பரமேஸ்வரி அம்மா, பத்மநாத ஐயர், புவனேஸ்வரி அம்மா, குணபூசனி அம்மா, சிறிதரசர்மா ஆகியோரின் அன்பு சகோதரியும் மாணிக்க வாசககுருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள், மகாலிங்கக் குருக்கள், கௌரி, தெய்வநாயகி, கல்யாணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2006) நண்பகல் 12 மணியளவில் அழகொல்லைப் பிள்ளையார் கோயிலடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி.

தகவல்:
இ.சுந்தரேஸ்வர சர்மா
(கணவர்)

(45899) (39-11-45)

மரண அறிவித்தல்

யோன் செல்லையா விக்ரர்

(பிரபல ரிங்கர்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட யோன் செல்லையா விக்ரர் 20.01.2006 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோன் செல்லையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் அனுரா, சங்கர் (டோகா), சேகர், சுந்தர் ஆகியோரின் அன்புத் தந்தையும் குணரஞ்சினி, மேரி மதிவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஏமினியின் பேரனாரும் எட்வேட் ராஜா (லண்டன்), றொபேட் (உரும்பிராய்), ஆதர் (உரும்பிராய்), லோறன்ஸ் (லண்டன்), தங்கராணி (உரும்பிராய்), டொறத்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவனேசன் (ஊரெழு), விக்னேஸ்வரன் (ரஞ்சன்), உமத்திரன், பாலன், தேவன் (இருபாலை), மோகன் (கொழும்பு), தாசன் (கோண்டாவில்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.01.2006) திங்கட்கிழமை ஒரு மணியளவில் கல்வியங்காடு சவேரியார் ஆலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(45900)(30-45-11)

தகவல்:
யோன் செல்லையா குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்துச்சபையில் ஓய்வுபெற்றோருக்கு இதுவரை பணிக்கொடை வழங்கப்படவில்லை

பாதிக்கப்பட்டோர் சட்ட நடவடிக்கையை நாட முஸ்தீபு

அரியாலை,ஜன.23

வடபிராந்திய போக்குவரத்து சபையில் பணியாற்றி கடந்த 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குப் பின்னர் இளைப்பாறிச் சென்ற 50 இற்கும் மேற்பட்டவர்களுக்கான பணிக்கொடை இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென வழங்கப்படவிருக்கும் இரண்டுகோடி ரூபா வரையிலான பணத்தை அனுப்பிவைப்பதற்கு கொழும்பில் உள்ள தலைமையலுவலகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது அசமந்தப்போக்கைக் கடைப்பிடித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதுதொடர்பாகப் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் தங்கள் நிலைமையைச் சுட்டிக்காட்டி பல்வேறு தரப்பினர்களுக்கும் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மகஜர்களில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போக்குவரத்துச் சபையில் பணியாற்றி வயது வந்து ஓய்வுபெற்ற எமக்கு வழங்கப்படவேண்டிய பணிக்காலக் கொடுப்பனவு இன்றுவரை வழங்கப்படவில்லை. இக்கொடுப்பனவு ஓய்வுபெற்று ஒருமாத காலத்தினுள் வழங்கப்படவேண்டியது. ஒக்ரோபர் 2004ஆம் ஆண்டிலிருந்து இளைப்பாறிய சாரதிகள், காப்பாளர், பொறியியல் ஊழியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சாலை முகாமையாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள் ஆகிய தரங்களைச் சேர்ந்த ஊழியர்கள் பாதிப்படைந்துள்ளோம்.

இது விடயமாக வ.கி.போ. சபை பொது முகாமையாளரைச் சந்தித்து எமது கஷ்டங்களைத் தெரிவித்திருந்தோம். கடந்த காலங்களில் இப்படியான கொடுப்பனவில் காலதாமதம் ஏற்படவில்லை.

இதுதொடர்பாக யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை ஆணைக்குழு, தொழில் ஆணையாளர், போக்குவரத்து அமைச்சர், ஜனாதிபதி ஆகியோருக்கும் கடிதம் மூலம் தெரிவித்து இருந்தும் எவ்வித பலனும் கிட்டவில்லை. தொழில் ஆணையாளர் (யாழ்ப்பாணம்) அவர்களை நாம் சந்தித்து எமது இந்தப் பணத்தைப் பெற்றுத்தர சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டோம். 30 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி ஓய்வுபெற்ற நாம் எமது வயோதிப காலத்தில் இப்பணம் கிடைக்காமையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

கொடிகாமம், சாவகச்சேரி நகரங்கள் நேரகாலத்துடனேயே வெறிச்சோட்டம்!

சாவகச்சேரி,ஜன.23

தென்மராட்சியில் அடிக்கடி இடம்பெறும் அசம்பாவித சம்பங்களால் கொடிகாமம், சாவகச்சேரி நகரங்கள் தினமும் நேரகாலத்துடன் வெறிச்சோடிவிடுகின்றன.

காலையில் மட்டும் ஓரளவு சனக்கூட்டம் காணப்படும். நண்பகலுக்கு முன்பாக மக்கள் தத்தமது அலுவல்களை முடித்துக்கொண்டு வீடு திரும்பிவிடுகின்றனர்.

அரச அலுவல்களில் பணிபுரிவோர் மிகுந்த அச்சத்தின் மத்தியிலேயே பணிகளுக்குச் சென்று திரும்புகின்றனர்.

நகரப்பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வர்த்தகர்கள் இதனால் பெரிதும் நொந்து போய் இருக்கிறார்கள். அடிக்கடி தாக்குதல்களும், சூட்டுச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. பெரும் எண்ணிக்கையில் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 கண்டி வீதியில் முழத்துக்கு முழம் ஆயுதங்களுடன் படையினர் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். சகல வாகனங்களையும் பயணிகளையும் மறித்துச் சோதனை செய்கின்றனர். மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோ வாகனங்களில் வருவோர் துருவித்துருவி விசாரிக்கப்படுகின்றனர்.

மாலையில் இந்த வீதிவழியே செல்வோர் மிகுந்த பயப்பீதியுடனேயே பயணிப்பதைக் காணமுடிகின்றது. (ஐ-31)

ஏழாலை வடக்கில் படையினர் குவிப்பு: பீதியால் மக்கள் இடம்பெயர்கின்றனர்!

யாழ்ப்பாணம்,ஜன.23

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள ஏழாலை வடக்குப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், பதற்றமடைந்த அப்பகுதி மக்கள் பாதுகாப்பான பிரதேசங்களை நோக்கி வெளியேறிவருகிறார்கள்.

இதுவரையும் சுமார் 15 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

மேலும் பல குடும்பங்கள் குடிபெயர்ந்து செல்வதற்கு ஆயத்தமாக உள்ளன எனவும் கூறப்படுகின்றது.

இடம்பெயர்ந்தவர்களில் பலர் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குச் சென்றுள்ளனர். இவர்களில் சிலர் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவினர்களுடைய வீடுகளில் தங்கியுள்ளனர்.

இப்பகுதிக்கு இரவு நேரங்களில் செல்லும் இனந்தெரியாத நபர்கள் இளைஞர்கள் சிலரின் விவரங்களைக் கேட்டு விசாரித்து வருகின்றனர். இதனால், மக்கள் மேலும் பீதியடைந்துள்ளனர். (ஐ-14)

திறந்த பல்கலைக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ். திறந்த பல்கலைக்கழகத்திற்கான இரண்டுமாடி கட்டட வேலைகள் துரித கதியில் இடம்பெற்றுவருகின்றன.

இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் கட்டடப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டு உத்தியோக பூர்வமாக கையளிக்கப்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 44.8 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிகளைக் கொண்டதாக நவீன வடிவில் கட்டடப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. (ஐ-185)

4 லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்திய கண் சோதனை முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.23

விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்று அண்மையில் கொக்குவில் மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்றது.

கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் வலய லயன்ஸ் கழகங்களான மானிப்பாய், கொக்குவில், திருநெல்வேலி, மல்லாகம் - தெல்லிப்பழை ஆகிய கழங்கள் இணைந்து இந்த முகாமை நடத்தின.

இந்நிகழ்வில் 210 பேர் பரிசோதிக்கப்பட்டு 17 பேர் சத்திரசிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் கண் பரிசோதனைகளை மேற்கொண்டார்.

கண்பரிசோதனை நிகழ்வில் லயன் எஸ். எஸ்.தங்கராஜா, கழகங்களின் தலைவர்களான லயன் எஸ்.ஸ்ரீநிவாசன், லயன் எம். இளம்பிறையன், லயன் எம்.இன்னேசியஸ், லயன் எஸ்.ஆறுமுகநாதன், மாவட்டத் தலைவர் லயன் கே.சற்குணநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-203)

கொக்குவில் மேற்கில் 4 லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்திய கண்பரிசோதனை முகாமில் எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவருக்குப் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜன.23

2005ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவருக்கான பாராட்டுவிழா இன்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் பெற்றோர்களும் இதில் கலந்துகொள்வர். (ஐ-14)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



முற்றவெளியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையக் கட்டடத்தையும் புதிய மீற்றர் பம்பிகளையும் படத்தில் காணலாம். (படம்:- பா.நந்தன்)

கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலைய கட்டடம் வைபவரீதியாக இன்று திறப்பு

அரியாலை,ஜன.23

முற்றவெளியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலைய கட்டடம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு சுபவேளையில் மக்கள் பாவனைக்குத் திறக்கப்படும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் கே.கவிந்திரதாஸ் தெரிவித்தார்.

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் எதுவித ஆடம்பர வைபவமும் இன்றி இக்கட்டடத்தில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை-

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தால் நவீன வசதிகளுடன் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக நிறுவப்பட்ட இக்கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் யாவும் நிறைவடைந்ததையடுத்து கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் வி. சண்முகநாதன் தலைமையிலான குழு ஒன்று கடந்த சனிக்கிழமை பார்வையிட்டது. அத்துடன் இந்த எரிபொருள் விற்பனை நிலையத்திற்குப் புதிய காற்றடிக்கும் பம்பியும் பொருத்தப்பட்டுள்ளது.

இதேசமயம், இன்றைய திறப்பு விழா நிகழ்வில் சங்கத்தின் உபதலைவர் எஸ்.ரி. கணநாதன் உட்பட சங்கத்தின் இயக்குநர்கள் மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள். (ஐ-17)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூத்த பணியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தொடர்ந்து 26 வருடங்கள் சேவையைப் பூர்த்திசெய்த பணியாளர்கள் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 17ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 250இற்கு மேற்பட்ட பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் பணியாற்றும் க.ரவிராஜ், பெ.ஏ.ஹென்றி மற்றும் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பும் களஞ்சியத்தில் பணியாற்றும் ம.ஜென்றிக், ம.பரிமளராஜா ஆகியோரும் இந்தக் கௌரவிப்பு வைபவத்தில் தங்கப் பதக்கங்களைப்பெற்றுக்கொண்டனர்.

பெற்றோலியத்துறை அமைச்சர் ஏ.எச். எம்.பௌசி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலியமெதகமே ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு பணியாளர்களுக்கான தங்கப்பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தனர். (ஐ-17)

நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

நல்லூர் பிரதேசசபை தனது சபை நிதி மூலம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆறு லட்சத்து இரண்டாயிரம் ரூபா செலவில் கொக்குவில் சந்தை எல்லைச் சுவர் அமைப்பதற்கும் -

ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபா செலவில் கொக்குவில் முதலியார் வீதி அமைப்பதற்கும் -

இரண்டு லட்சம் ரூபா செலவில் பிரம்படி 2ஆம் குறுக்கு வீதி அமைப்பதற்கும் -

நான்கு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா செலவில் கோண்டாவில் வன்னிய சிங்கம் வீதி அமைப்பதற்கும் -

ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் கொக்குவில் உபஅலுவலகம் திருத்தியமைப்பதற்கும் -

மூன்று லட்சத்து இருபத்தி இரண்டாயிரம் ரூபா செலவில் கோண்டாவில் கேணியடி வீதி திருத்துவதற்கும் -

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவியாளர் கு.தவசோதி தெரிவித்தார். (3-69)

SEMINAR FOR ENGINEERS

TITLE	:-	Awareness of Tsunami and Guidelines for Building Construction in coastal Areas.
PRESENTED BY	:-	Eng.S.Suntharakumar (B.Sc Eng, C Eng, M.I.E (SL), Chief Engineer, Building Department, Kilinochchi / Mullaitivu.
VENUE	:-	Conference Hall, Circuit Bangalow, NEIAP, Irrigation Department, Kilinochchi.
DATE / TIME	:-	31.01.2006 (Tuesday) 10.00 AM - 12.30 NOON
FEE	:-	Rs.1000/=
NOTE	:-	Please register your name at North East Development Consultants (PVT) Ltd. Parathypuram, Kilinochchi, on or before 10.00 am on 30th January 2006 (Bylane, near ICRC Head Office)
ORGANIZERS	:-	North East Development Consultants (PVT) Ltd.

A.Sivalingam,
Director,
NEDC,
Kilinochchi.

(C/47470)

ஓராண்டு நினைவலைகள்

மண் மகிழ
19 - 11 - 1920

மனம் நெகிழ
02 - 02 - 2005

அமரர் கந்தையா நாகப்பர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: 23-01-2006 அபரபக்க நவமி

அன்புள்ள ஐயாவே!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
உங்கள் நெறியால் எம்மைச் சேர்ந்தன
எங்கள் சாதனையும் எங்கள் புகழும்
உங்கள் வழியால் எமக்கு வந்தன
எங்கள் பரம்பரை உம்வழி தொடரும்
எங்கள் பரம்பரை உம்புகழ் பாடும்
உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களில்
என்றென்றும் இனிமை சேர்க்கும்.

மனைவி, பிள்ளைகள்,
பருமக்கள்
பேரர், பேர்த்தியர்.

விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(45887)(26-11-45)

வீதிகள் புனரமைப்புக்காக உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜன.23

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் அவசியம் திருத்தப்படவேண்டிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

மஹிந்த சிந்தனை - தேச நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சினால் வழங்கப்படும் நிதி ஊடாக செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டம் - 2006 இன் கீழ் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தினை மேற்கொள்ள நகர சபைகளுக்கு தலா 4 லட்சம் ரூபாவும் பிரதேச சபைகளுக்குத் தலா 3 லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

உள்ளூராட்சி சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மிக அவசியமாகத் திருத்தப்பட வேண்டிய வீதியின் பெயரையும் சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் சகல உள்ளூராட்சி சபைச் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (த-117)

கிராம சேவையாளர்களின் பல்வேறு கோரிக்கைகளுக்குத் தீர்வு

யாழ்ப்பாணம்,ஜன.23

கிராம உத்தியோகத்தர்களுடைய நீண்டகாலக் கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் ஏற்பாட்டில் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் கடந்த 18ஆம் திகதி பிற்பகல் 2மணியளவில் அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க தலைமையில் வடக்கு - கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்களுக்கான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே மேற்படி தீர்வு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கிராம உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஆர். நோபேட், வடக்கு - கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர் சங்கத்தலைவர் பி.வசந்தகுமார், செயலாளர் கே.வாமதேவன், உபதலைவர்களான என்.சிவகுமாரவேலு, எம்.ஏ.நாகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்படி இம்மாதம் முதலாம் திகதி முதல்

கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்று திறைசேரிக்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட விவரங்கள் வருமாறு:-

- கிராம உத்தியோகத்தர்களின் சீருடைக்கான கொடுப்பனவு வருடம் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாவுக்குப் பதிலாக 5 ஆயிரம் ரூபா ஒரு வருடத்தில் இரு தடவையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ஒரு வருடத்திற்கான காகிதாதிகளுக்கான கொடுப்பனவு 750 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- மூன்று மைல்களுக்கு வழங்கப்பட்டு வந்த பிரயாணப்படி 250 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது.
- அலுவலக வாடகை கிராமப் பகுதிகளுக்கு 300 ரூபாவிலிருந்து 500 ரூபாவாகவும், நகரப் பகுதிகளுக்கு 500 ரூபாவிலிருந்து 750 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- துவிச்சக்கர வண்டிக்கான படி 75 ரூபாவிலிருந்து மாதம் ஒன்றுக்கு 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தப் பிரிவுகளில் கடமையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய வட்டியில்லாக் கடன் அடிப்படையில் சம்பளத்திலிருந்து மாதாந்தம் அறவிடப்படும் வகையில் தீர்வையற்ற மோட்டார் சைக்கிள் வழங்கப்படும்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நலன்புரி நிலையங்களிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் தங்கிவாழும் மக்கள் நிரந்தரமாகத் தமது புதிய வீடுகளுக்குச் செல்லும் வரைக்கும் அவர்களுடைய நலன்களைக் கவனித்து வரும் கிராம உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டு வந்த படியினைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு அமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார். (3-8)

அறிவித்தல்

வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

31-01-2006இல் வாக்காளர் பட்டியல் முடிவுறுத்தல்

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் நடைபெற உள்ளதால் கிளைக்குழுத் தேர்தலில் பங்குகொள்வதற்கு ஏதுவாக பங்குப் பணத்தை முழுமையாகச் செலுத்தாத அங்கத்தவர்கள் தங்கள் பங்குப் பணத்தை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் 31-01-2006இற்கு முன்னர் முழுமையாகச் செலுத்தி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வேலணை ப.தெ.வ.அ.சங்கம்,
வேலணை மேற்கு, வேலணை.

(45862)(26-11-45)

கண்ணீர் அஞ்சலி

எமது மதிப்பிற்குரிய
லயன் ஆ.சாந்தலிங்கம்
அவர்களின் தாயார்

திருமதி

ஆறுமுகம் அமராவதி

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (45586)(26-11-45)

உரிமையாளரும், ஊழியர்களும்,
ஐடியல் கிறீம் ஹவுஸ்.

மரண அறிவித்தல்

திருமதி ஆறுமுகம் அமராவதி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது பாண்டியன்தாழ்வில் வசித்தவருமாகிய திருமதி ஆறுமுகம் அமராவதி 21.01.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் இராசலிங்கம், சாந்தலிங்கம், காலஞ்சென்ற சண்முகலிங்கம், பஞ்சலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகலட்சுமி, மகாராணி, தர்சினி, நித்தியானந்தபூபதி, ஈஸ்வரி, லீலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, பார்வதி, மருதடியான் மற்றும் அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பறுவதம் செல்லம்மா, காலஞ்சென்ற கண்ணம்மா, சின்னம்மா, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, தையல்முத்து (சின்னத்தங்கச்சி) பிள்ளையம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லயன் ஆ.சாந்தலிங்கம்,
12/3, சந்தனமாதா கோயில் வீதி,
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி.
தொ.பே. 4590488 (45584)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டுசுட்டானில் குற்றச்செயல்களைத் தடுக்க காவல்துறையினர் தீவிர நடவடிக்கை

ஒட்டுசுட்டான்,ஜன.23

ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குக் காவல்துறையினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோரையும் திருட்டு மற்றும் அடிதடிகளில் ஈடுபடுவோரையும் கைதுசெய்து சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், இப்பகுதிகளில் இரவு நேரரோந்து நடவடிக்கைகளிலும் காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

காவல்துறையினரின் இத்தகைய தீவிர நடவடிக்கைகளால் இப்பகுதிகளில் குற்றச்செயல்கள் குறைந்துவருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (3-6-341)

தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளுடன் புலிகள் சந்திப்பு

கிளிநொச்சி,ஜன.23

புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும் சர்வதேச, உள்நாட்டு தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் முற்பகல் 9 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

புளியங்குளத்தில் உள்ள புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தலைமையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இராணுவத்தினரின் அச்சுறுத்தல் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தொடர்ச்சியாக வருகைதரும் மக்களுக்கான மனிதாபிமான அவசர உதவிகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கலந்துகொண்ட தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உதவிகளை வழங்க உறுதி அளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

வவுனியா வடக்கில் உரத்துக்கு தட்டுப்பாடு; விவசாயிகள் பாதிப்பு

புளியங்குளம்,ஜன.23

வவுனியா வடக்குப் பகுதியில் உரத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா வடக்கிலுள்ள கமநல சேவை நிலையங்களில் உரத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் அப்பகுதி விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால், இப்பகுதி விவசாயிகள் ஆயிரத்து 100 ரூபாவிற்குத் தனியார் கடைகளில் உரத்தினைக் கொள்வனவுசெய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா உட்பட தென் பகுதிகளில் 350 ரூபாவிற்கு உரம் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-6-355)

முரசுமோட்டை வயல்களில் நெற்பயிரில் பூச்சித் தாக்கம்

பரந்தன்,ஜன.23

முரசுமோட்டை,ஊரியான், புளியம் பொக்கனைப் பகுதிகளில் நெற்பயிர்களின் அழிவு அதிகரித்துள்ளது.

இதற்கு கபிலநிறத் தத்திப்பூச்சி, பச்சைத் தத்திப்பூச்சி, இலைச்சுருட்டிப் புழுக்கள் ஆகியவற்றின் தாக்கங்களே காரணம் என்று கூறப்படுகின்றது.

இவற்றை இனங்கண்டு தடுப்பதற்கு விவசாயத் திணைக்கள அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

கபிலநிறத் தண்டுத் தத்திப்பூச்சிகள் அதிகளவில் நெற்பயிர்களின் அடியில் காணப்பட்டால் அதாவது ஒரு நெற்பயிரின் அடியில் 5இற்கு மேற்பட்ட பூச்சிகள் இருந்தால் அவற்றை அவதானித்து மருந்து விசிற வேண்டும்.

தண்ணீர் இருக்கும் நெல் வயல்களில் தண்ணீரில் தேங்காய்ப்பூ போன்று அல்லது நெகிழும் கொடியின் பூ தண்ணீரில் மிதப்பது போன்று பூச்சிகள் மிதக்கும்.

வயல் நிலங்களில் இவ்வாறு பூச்சிகள் அதிகரித்துக் காணப்பட்டால் அவற்றைப் பிடித்து உட்கொள்வதற்கு வானத்தில் உள வாரக் குருவிகள், தும்பிகள் என்பன அதிகளவில் பறந்துதிரியும்.

இதனை அவதானித்தே வயல் நிலங்களில் கபிலநிறத்தத்திகளின் தாக்கம் அதிகரித்துள்ளதை அவதானிக்கமுடியும். இவ்வாறு பூச்சிகளின் தாக்கத்தை அவதானித்த விவசாயிகள் இரசாயன மருந்துகளைப் பயன்படுத்துவதாயின் அதற்கு உரியவர்களிடம் ஆலோசனை பெறவேண்டும்.

அவ்வாறு செய்யாவிடின் பூச்சிகளின் தாக்கம் குறைவடையாது அதிகரித்துக் கொண்டே செல்லும் என்று தெரிவிக்கப் பட்டது. (3-352-203)

உலக கனேடிய பல்கலைக்கழக சேவை (WUSC) நிறுவனத்தின் அனுசரணையுடன் கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடத்தப்படும் (REERDO) தொழில்சார் பயிற்சியில் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தினால் கிருஸ்ணமுரளி ஆசிரியரால் எச்.ஐ.வி. குறித்த விழிப்புணர்வு வகுப்பு நடத்தப்பட்டது. வகுப்பு நடைபெற்றவேளை எடுக்கப்பட்ட படம் இது. (படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

குமுழமுனையில் பொதுநோக்கு மண்டபம்

புதுக்குடியிருப்பு,ஜன.23

முல்லைத்தீவு, குமுழமுனையில் கடந்த 11ஆம் திகதி பொதுநோக்கு மண்டபம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதுநோக்கு மண்டபத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வு பாரம்பரிய கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமானது.

நிகழ்வில் மங்கள விளக்கை முள்ளியவளைப் பிரதேச செயலாளர் சோதிநாதன், முல்லைத்தீவுப் பிரதேச விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை முள்ளியவளைப் பிரதேச பொறுப்பாளர் சரவணன் ஏற்றிவைத்தார்.

பொதுநோக்கு மண்டபத்தை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி மேரி இமெல்டா சுகுமார் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

குமுழமுனை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கா.இரதிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச அதிபர் இமெல்டா சுகுமார், விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை, பிரதேசப் பொறுப்பாளர் சரவணன் உட்படப் பலர் உரையாற்றினர்.

நிகொட் நிறுவனத்தின் 'கார்ப்' திட்டத்தின்கீழ் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. (3-353-203)

கிட்டு நினைவு நிகழ்வு

புளியங்குளம்,ஜன.23

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 12 மாவீரர்களின் நினைவு தினம் புளியங்குளம் பலநோக்கு மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

புளியங்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.திலீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை மாவீரர் கப்டன் தனேஸின் தாய் திருமதி தேவி ஏற்றினார். கேணல் கிட்டு உட்பட 12 மாவீரர்களின் திருவுருப் படங்களிற்கான மலர் மாலையினை புளியங்குளத்தைச் சேர்ந்த கந்தசாமி அணிவித்தார். (3-6-355)

காளை மாடுகள் மீட்கப்பட்டன

பரந்தன்,ஜன.23

திருடர்களால் கடத்திச்செல்லப்பட்ட இரு சோடி காளை மாடுகள் ஆயப்பகுதியினரால் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைப் பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது :-

பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த க.பொடிசிங்கம், வே. இரத்தினம் ஆகியோர்களுக்குச் சொந்தமான இரண்டு சோடி காளை மாடுகள் அண்மையில் திருட்டுப் போயிருந்தன.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்களால் ஆயப்பகுதியில் முறையிடப்பட்டது. ஆயப்பகுதியினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையையடுத்து பரப்புக்கடந்தான் வீதியிலுள்ள பெரியவலகாட்டுப் பகுதியில் வைத்து திருட்டுப்போன காளை மாடுகள் மீட்கப்பட்டன.

காளை மாடுகளைத் திருடிய நபர்களையும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 17 ஆயிரத்து 49 ரூபா பணமும் உரியவர்களிடம், அடம்பன் தமிழீழக் காவல் பணிமனை ஊடாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (3-6)

வன்னியில் நியமனம் பெற்ற அலுவலர்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி அவதி!

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் கடமையாற்றும் - புதிதாக நியமனம் பெற்ற அரச ஊழியர்கள் தங்குமிடம் தொடர்பில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி புதிதாக நியமனம் பெற்ற அலுவலர்களுக்குத் தங்குமிட வசதி எதுவும் அரசினால் செய்துகொடுக்கப்படவில்லை. இதனால், இந்த ஊழியர்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்து தமது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இன்னும் பலர் தங்குமிட வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டபொழுதிலும் அது தொடர்பான உரிய நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட ஊழியர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசங்களிலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றுவோர், தங்குமிட வசதி தொடர்பில் மேலும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்றே கூறல் வேண்டும்.

புனரமைக்கப்படாத ஆசிரியர் விடுதிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒருசில பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் உள்ளன. ஆனால், அவை கடந்த பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் இந்த விடுதிகளில் மழைகாலங்களில் தங்கியிருக்கமுடியாது.

இவைதவிர, தற்காலிகக் கொட்டில்களாக நிறுவப்பட்ட தங்குமிடங்களின் கூரைகள் பலத்த சேதமடைந்து வானம் தெரிகின்றது. இதேவேளை - இத்தகைய தற்காலிக கொட்டில்களில் தங்கியிருப்போருக்கு அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக பெண் ஊழியர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒருசில பாடசாலைகளில், அலுவலகங்களில் மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டபோதும், பெரும்பாலான இடங்களில் இது பிரச்சினையாகவே உள்ளது.

அத்துடன் ஊழியர்கள் தங்கியுள்ள இடங்களில் மலசலகூடவசதிகள் இல்லாமையால் அவர்கள் சிரமமடைகின்றனர்.

பணிப்பாளரின் கருத்து

அண்மையில் பாடசாலை நிகழ்வொன்றில் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கலந்துகொண்டு இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இன்றும் மாணவர்கள் தலையில் இருந்தே தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். மாணவர்களது தேவைகளையே உடனடியாக நிவர்த்தி செய்யமுடியாத நிலையில் நாங்கள் உள்ளோம்.

முதலில் மாணவர்களது பிரச்சினைகளைப் பார்ப்போம். அதன் பின்னர் ஏனைய விடயங்களைப் பார்க்கலாம் - என்றார்.

ஆசிரியையின் ஆதங்கம்

இவ்விடயம் தொடர்பாக பாடசாலை ஆசிரியை ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

இன்று மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன.

இந்நிலையில், நான் கற்பிக்கும் பாடசாலை அதிகஷ்டப் பாடசாலை, அந்தப் பாடசாலையை முன்னேற்றுவது எப்போது என்ற ஆதங்கத்துடன் நான் இப்பாடசாலையில் கற்பித்து வருகின்றேன்.

இப்பாடசாலைக்கு அருகில் ஒரு வீடு வாடகைக்காவது கிடைக்குமா எனத் தேடினேன். கிடைக்கவில்லை. இந்நிலையில் நான் பாடசாலையிலிருந்து 4 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள வீடொன்றில் தங்கியுள்ளேன்.

காலையில் பாடசாலைக்குச் செல்வதற்கு 9 மணிக்கு மேல் ஆகிவிடும். அவ்வாறு கஷ்டத்தின் மத்தியில் பாடசாலைக்குச் சென்றால், அங்கு [illegible] பாடசாலை அதிபர் கூறும் வார்த்தைகள் எரிச்சலூட்டும்.

இவ்வாறான ஒரு மனநிலையுடன் வகுப்பறைக்குள் சென்று மாணவர்களுக்கு எவ்வாறு மகிழ்ச்சியாகக் கற்பிக்கமுடியும்? எமது நிலைமைகளையும் கொஞ்சம் அனைவரும் யோசிக்க வேண்டும். இந்நிலைப்பாட்டில்தான் பலர் இடமாற்றம் கோருகின்றனர் - என்றார் அவர்.

'யுனிசெவ்' பிரதிநிதி ஒருவரிடம் இது தொடர்பாகக் கருத்துக் கேட்டபோது:-

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் 25வீதமான பாடசாலைகள்தான் நிரந்தரக் கட்டடங்களில் இயங்குகின்றன. ஏனையவை தற்காலிக இடங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

சி.கேசவன்,
விசுவமடுச் செய்தியாளர்

இந்தத் தற்காலிக கொட்டகைகளை வேய்வதற்கு வருடாவருடம் மில்லியன் கணக்கில் செலவாகின்றன. இந்நிலையில் ஆசிரியர்களின் நிலைமையை கவனிப்பதென்பது கேள்விக்குறியாகவே உள்ளது - என்றார்.

கண்டாவளை, பூநகரி, பளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் கிளிநொச்சி அரச அதிபர் பிரிவிற்குட்பட்டவை. இங்கு 200 பட்டதாரிகள் நியமனம் பெற்றுள்ளனர்.

150 பேர் அரச அலுவலக ஊழியர்களாகவும் 50 பேர் ஆசிரியர்களாகவும் கடமைபுரிகின்றனர். இவர்களில் பலர் இன்றும் வாடகை வீடு தேடி அலைந்த வண்ணமேயுள்ளனர். ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்டி நகருக்கு வரும் வாகனங்கள் திடீர் திடீரென மறிக்கப்பட்டு சோதனை

விடுதிகளில் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு இடமளிக்கப் பின்னடிப்பு

கொழும்பு,ஜன.23

கண்டி மாநகரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நகரத்தின் மையப்பகுதிக்கு பிற மாகாணங்களில் இருந்து வரும் பஸ் மற்றும் மினி பஸ் போன்ற பயணிகளின் வாகனங்கள் திடீர் திடீர் என மறிக்கப்பட்டு பயணிகள் இறக்கப்பட்டு ஆள் அடையாள அட்டைகள், பிரயாணப்பொதிகள் என்பன பரிசோதிக்கப்படுகின்றன.

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் இருந்து வரும் வாகனங்களே இவ்வாறு அடிக்கடி பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து வரும் பயணிகள் வண்டிகள் அம்பதென்னவிற்கும் கட்டுகஸ்தோட்டைக்கும் இடையில் திடீர் பரிசோதனைக்காக மறிக்கப்படுகின்றன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து வரும் தமிழர்களுக்கு குறிப்பாக இளைஞர், யுவதிகளுக்கு தங்குமிட விடுதிகள் இடம்தர தயக்கம் காட்டுவதுடன் மறுப்பும் தெரிவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த 12ஆம் திகதி தொடக்கம் கண்டி கல்வியியல் கல்லூரிக்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக பண்டாரவளை, அம்பாறை,மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இருந்து வந்த மாணர்கள் தங்குமிட வசதிபெறுவதற்காக விடுதி விடுதியாக அலைந்து திரிந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாண இந்து கலாசார நிலையத்தின் நடைபாதைகளில் இடநெருக்கடி காரணமாக இவர்கள் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

(ஐ-88)

ஜி.சீ.ஈ. விடைத்தாள்களைத் திருத்தும் இரண்டாம் கட்டப் பணி 28 இல் ஆரம்பம்

அச்சுவேலி,ஜன.23

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களின் 2ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இப்பணிகள் எட்டு நாள்கள் இடம்பெறும்.

முதலாம் கட்ட மதிப்பீட்டுப் பணியில் பிரதான பாடங்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட மதிப்பீட்டுப் பணியில் விருப்பத்திற்குரிய பாடங்களான இலக்கியம், புவியியல், வரலாறு, அபிவிருத்திக் கல்வி ஆகிய பாடங்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப் படவுள்ளன.

யாழ். மாவட்டத்திற்கான மதிப்பீட்டுப் பணிகள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடவுள்ள பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோருக்கான நியமனக் கடிதங்களைப் பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்கா அனுப்பிவைத்துள்ளார். (ஐ-11-14)

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

2000 Km பாவித்த மோட்டார் சைக் (C.B Set) விற்பனைக்குண்டு. தொடர்பிறகு: 077 - 3126744, 077 6524974. (43849)

கார் விற்பனைக்கு

19 - XXXX தொடரிலக்கத்தினை உடைய வெள்ளைநிற நிசாந் சனி (Doctor Sunny) கார் 25th Anuversary Model Full Obtion உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773053064. (43894)

கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 23.01.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி. நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47304)

கார் வாடகைக்கு

திருமண வைபவங்களிற்கும் வேறு பாவனைகளிற்கும் கார் வாடகைக்கு உண்டு. தொடர்பிற்கு: 0773 126902, 0777-222180, 0777 - 283595. (45850)

தவறிவிட்டது

3ஆம் கட்டை, துன்னாலை, கரவெட்டி என்ற முகவரியை உடைய சிவனடியான் சிவரூபன் என்பவருடைய தே.அ.அட்டை (இல. 831131950V) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிற பேர்ஸ் யாழ். பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துவவும். மந்தாகினி தெலைத்தொடர் பகம், கே.எஸ்.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3500, 0777 170746 (45892)

ஐயாத்துரை தயாபரன் என்பவரது 2500 France Frank சங்கானையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்சில் வரும்பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.: 077 6184589. (45833)

மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரல்

வலி.வடக்கு,ஜன.23

இலங்கை மதுவரித் திணைக்களத்தால் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப் பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுதிகதி மார்ச் மாதம் 3 ஆம் திகதியாகும்.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகப் பட்டம்பெற்று இருப் பதுடன், ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் ஆகக் குறைந்த திறமைச் சித்தியைக் கொண் டிருக்க வேண்டும்.

உயரம் 5 அடி 6 அங்குலமாகவும் (167.6 சென்ரிமீற்றர்), நெஞ்சுச் சுற்றளவு 30 அங்குல மாகவும் (83.8 சென்ரிமீற்றராக வும்) இருக்க வேண் டும்.

21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருப்பதுடன் விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

விண்ணப்பங் களை 'மதுவரி ஆணையாளர், மா அதிபதி, இல.29, ஸ்டேப்பில் வீதி, கொழும்பு - 2' என்னும் முகவரிக்கு அனுப்பும்படியும் வேண்டப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 20.01.2006 ஆம் திகதி அரச வர்த்தகமானியில் பார்வையிடலாம்.

(ஐ-86)

கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர் லயன் கா.சற்குணதேவன் அவர்களின் பாசமிகு தாய்

திருமதி புஸ்பலீலா காசிலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

லயன்ஸ் கழகம், சாவகச்சேரி.

(சி/47471)(32-11-45)

கண்ணீர் அஞ்சலி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது பாண்டியன் தாழ்வில் வசித்தவருமாகிய

திருமதி ஆறுமுகம் அமராவதி

அவர்கள் 21.01.2006 சனிக்கிழமை காலமானார். எங்கள் அப்பம்மாவின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அப்பம்மாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (45893)(32-11-45)

ச.சதீஸ், கேதீஸ் (பேரர்).

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம்	748
திகதி	20-01-2006

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5939562-5954224

வெற்றி இலக்கங்கள் 07 11 37 50

லக்கினம் தனுசு

ஜக்பொட் பரிசு ரூபா. 36,83,800/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 44,08,000/-

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் தொகை	பரிசுத் தொகை(ரூ.)	மொத்தப் பரிசுத் தொகை(ரு.)
1.இல	3,24,311	10/-	32,43,110/-
2.இலக்கங்கள்	29,744	20/-	5,94,880/-
1.இல லக்கினம்	29,460	30/-	8,83,800/-
2.இல லக்கினம்	2,709	100/-	2,70,900/-
3.இலக்கங்கள்	792	500/-	3,96,000/-
3.இல லக்கினம்	70	5,000/-	3,50,000/-
4.இலக்கங்கள்	03	1,00,000/-	3,00,000/-
4.இலக்கங்கள்	-	36,83,800/-	-
		மொத்தம்	60,38,690/-
முச்சக்கர வண்டி	5	2,10,450/-	10,52,250/-
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை			70,90,940/-

மொத்த பரிசுத் தொகை ரூபா. 70,90,940/- தொடர் இல. 4041397 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 ஜனவரி 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெறாத பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெறாி பெறும் 5 டிகட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

புத்தளம்	5952235-2-60
கொழும்பு	5950642-1-97
வரும்பாந்தோட்டை	5945130-2-71
மட்டக்களப்பு	5939984-0-15
மாத்தறை	5941618-6-17



21.01.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண் 24 31 38 69 08

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 300848063 இலிருந்து 300864101

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,04,77,400/- வெல்லப்படவில்லை

வெற்றி எண்கள்	வெற்றி பெற்றோர்	பரிசுத் தொகை	மொத்தம்
4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	-	1,04,77,400/-	-
4 வெற்றி எண்கள் மட்டும்	02	10,00,000/-	20,00,000/-
3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	33	5,000/-	1,65,000/-
3 வெற்றி எண்கள் மட்டும்	430	1,000/-	4,30,000/-
2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	1,452	500/-	7,26,000/-
2 வெற்றி எண்கள் மட்டும்	20,713	40/-	8,28,520/-
1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல.	19,850	20/-	3,97,000/-
1 வெற்றி எண் மட்டும்	2,96,247	10/-	29,62,470/-
மொத்தம்	-		75,08,990/-
நான்கு நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள்	5	1,00,000/-	5,00,000/-
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை	3,38,732		80,08,990/-

தொடர் இல. 200912833 கு மேற்பட்ட ஜந்து நிற டிக்கெட்டுகள் 2006 ஜனவரி 25 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,12,68,700/-

பணமாகிய வெற்றி பெறாத் டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான நான்கு நகைகள், தையல் இயந்திரம் வெறாிகள் முகமாக மேலே முறையை வெளிப்படுத்தி 3 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

அனுராதபுரம்	300853173-0-71
மட்டக்களப்பு	300852008-1-60
திருகோணமலை	300855871-4-57
புத்தளம்	300861482-0-26
கொழும்பு	300862080-4-56

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி லொத்தர் சபை இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி கொழும்பு03

COMPUTER EXPRESS

Institute of Information Technology

இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.

021-222 8250,0777 222422

முதன்முறையாக கம்பனிக்கணக்குகளுடன் தமிழ்மொழி விளக்கத்துடன்

ஒருவாரகால முழுநேர

Diploma in Computerized Accounting

Accpac + Quick Books Pro + MYOB

ஆகிய முன்னணி கணக்கியல் மென்பொருட்களினூடாக கற்பிக்கப்படுகின்றது.

Course Contents

- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing

கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போரும், கற்றுமுடித்தவர்களும், வெளிநாட்டில் கணக்கியல் துறையில் வேலை எதிர்பார்த்திருப்போரும், வேலைசெய்துகொண்டிப்போரும் இக் கற்கைநெறியைப் பயிலலாம்.

Course fee :- 3,500/=

நன்மைகள்:-

- பாடநெறியின் இறுதியில் கணனிக்கணக்கியல் தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தாராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 28/01/2006 :- 08.30

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

குறிப்பிட்ட அனுமதிக்கட்டணம் செலுத்தி உங்கள் பதிவுகளை முற்கூட்டியே உறுதிப்படுத்தல் அவசியமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிதாக நடந்த சண்டையில் நேபாளத்தில் 20 பேர் பலி!

தலைநகரில் எதிர்க்கட்சியினர் 200 பேர் கைது!!

காத்மண்டு,ஜன.23

நேபாளத்தில் சனிக்கிழமை இரவு மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதல்களில் இருபது பேர் வரை உயிரிழந்திருக்கின்றனர்.

தலைநகர் காத்மண்டுக்கு தென்மேற்குப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் நேபாளப் படையினர் ஆறு பேரினதும் தீவிரவாதிகள் 14 பேரினதும் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன என்று நேபாள இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

நேபாளத் தலைநகரில் உள்ள வீதிகளில் எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனை அடுத்து எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்கள் 200 பேரைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

நேபாள மன்னர் ஜியானேந்திராவின் அரசு மேற்கொண்டுவரும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டம் ஒன்றைக் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தத் திட்டமிட்டிருந்தன. ஆனால், மாவோ தீவிரவாதிகளின் அச்சுறுத்தலைக் காரணம்காட்டி அந்த நடவடிக்கைகக்கு அரசு தடை விதித்துவிட்டது.

முன்னேற்பாட்டு நடவடிக்கையாக எதிர்க்கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் 50இற்கும் மேற்பட்டவர்களைக் கைதுசெய்து சிறையிலும் அடைத்துள்ளது.

இதனையடுத்து வீதிக்கு இறங்கிய ஜனநாயக ஆதரவு எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் பொலீஸார் மீது கற்களை வீசித் தாக்கிக் கலகத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கலவரங்களின்போது 200 பேர் வரையிலானோரைப் பொலீஸார் தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றார்கள் என்று அரச தரப்புக் கூறுகின்றது. ஆனால், அந்த எண்ணிக்கை அதைவிட மிகவும் அதிகம் என்று எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர்.

ஊரடங்கு நடமுறையில் இருந்தவேளை அவர்கள் ஆர்ப்பாட்டங்களிலும் கலவரங்களிலும் ஈடுபட்டனர் எனப் பொலீஸார் கூறினர். (ம)

பறவைக்காய்ச்சலால் உயிரிழப்புகள் இந்தோனேஷியாவில் அதிகரிப்பு

ஜகார்த்தா,ஜன.23

இந்தோனேஷியாவில் பறவைக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்பட்ட இருவரது மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. சுகாதார அதிகாரிகளை மேற்கோள் காட்டி உலக சுகாதார ஸ்தாபனம் இத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

13 வயதுச் சிறுமியும் அவரது 4 வயது நிரம்பிய சகோதரனும் இவ்வாறு பறவைக் காய்ச்சல் நோய்த் தாக்கத்தால் பலியானவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுடன் சேர்ந்து இந்நோயால் இந்தோனேசியாவில் பிலியாகியோர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

இந்தோனேசிய ஜா பிராந்தியத்தில் வசிக்கும் இவர்கள் இரண்டு வாரத்திற்கு முன் மரணமாகி இருந்தனர். இவர்களது 15 வயது சகோதரி ஒருவர் பறவைக்காய்ச்சல் வைரஸ் இற்குரிய அறிகுறிகளுடன் ஏற்கனவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் 2003 இல் இருந்து இது வரை பறவைக்காய்ச்சல் நோயால் 80இற்கும் மேற்பட்ட நோயாளிகள் உலகெங்கும் மரணமாகியுள்ளனர். (ஐ-ரி)

ரஷ்யாவில் கிருஷ்ணன்கோயில் கட்ட இந்துக்களுக்கு அனுமதி மறுப்பு!

லண்டன்,ஜன.23

ரஷ்யாவில் வாழும் இந்துக்கள் அங்கு கிருஷ்ணர்கோயில் கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு இங்கிலாந்து எம்.பிக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அதற்கு உரிய நிலத்தை வழங்கவேண்டும் என்று ரஷ்யத் தலைநகரான மாஸ்கோ நகர மேயருக்கு அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து சென்ற 10 ஆயிரம் இந்துக்கள் ரஷ்யாவில் வசிக்கின்றனர். ரஷ்யாவில் இந்துமதத்தைத் தழுவியவர்கள் 90 ஆயிரம் பேர் உள்ளனர். மொஸ்கோவில் அவர்கள் கிருஷ்ணர்கோயில் ஒன்றைக் கட்டியிருந்தனர். 2004ஆம் ஆண்டு அது இடிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பின் தாங்கள் கோயில் கட்ட நிலம் தரவேண்டும் என்று மொஸ்கோ நகர நிர்வாகத்திடம் அங்கு வாழும் இந்துக்கள் கோரியதை அடுத்து, புதிய இடத்தில் நிலம் ஒதுக்கப்பட்டது. அங்கு தற்காலிககோயில் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், ரஷ்யாவைச் சேர்ந்த பழமைவாத கிறிஸ்தவ மதத் தலைவர்களின் வற்புறுத்தலையடுத்து, அந்த நில ஒதுக்கீட்டுக்கான அனுமதி ரத்துச்செய்யப்பட்டுவிட்டது.

ரஷ்ய இந்துக்களுக்கு வழிபாட்டு உரிமை மறுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இடம் ஒதுக்க வற்புறுத்தியும் மொஸ்கோ நகர மேயர் யூரி லுஸ்கோவிடம் லண்டன் நகர மேயர் கென்லி விங்ஸ்டன் கடிதம் வழங்கியுள்ளார்.

அதைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் எம்.பிக்களின் கூட்டம் லண்டனில் லிபரல் கட்சியின் துணைத்தலைவர் நவநீத் டோலக்கியா தலைமையில் புதன்கிழமை நடந்தது. மொஸ்கோ இந்துக்கள் தமக்குரிய வழிபாட்டுத் தலத்தைக் கட்டிக்கொள்ள நிலம் வழங்குமாறு மொஸ்கோ நகர நிர்வாகத்தை வலியுறுத்தி, அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

பின்லேடனின் அச்சுறுத்தலால் தங்கம் விலை கிடுகிடு உயர்வு!

மெல்போர்ன்,ஜன.23

அமெரிக்காவில் மீண்டும் அல்கெய்டா அமைப்பினர் தாக்குதல் தொடுப்பர் என சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் ஒலிநாடா மூலம் வியாழக்கிழமை எச்சரிக்கை விடுத்ததையடுத்து தங்கத்தின் விலை கடுமையாக உயரத்தொடங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெள்ளிக்கிழமை தங்கத்தின் விலை கிடுகிடுவென உயரத் தொடங்கிவிட்டது.

அமெரிக்க சந்தையில் ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலை 14 டொலர்களுக்கும் கூடுதலாக உயர்ந்துவிட்டது.

அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11இல் அல்கெய்டா நடத்திய தாக்குதலுக்குப் பின் தங்கத்தில் பணத்தை முதலீடு செய்யும் போக்கு அதிகரித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

அரசியல் நிலையற்ற தன்மை காரணமாக எந்தவித முதலீடுகளுக்கும் உத்தரவாதம் இல்லாத நிலையில், தங்கத்தில் முதலீடு செய்வதே பாதுகாப்பானது என்று முதலீட்டாளர்கள் கருதும் போக்கும் அதிகரித்துள்ளது. (ஐ)

தீயணைப்புக்கு உதவும் 'ரோபோ'க்களை விற்பனைக்கு விட சீனா ஏற்பாடு!

பெய்ஜிங், ஜன.23

தீயணைப்பு ரோபோக்களை வணிக ரீதியில் விரைவில் உற்பத்தி செய்ய சீனா திட்டமிட்டுள்ளது.

300 கிலோ எடையுள்ள இந்த 'ரோபோ' எத்தப் பக்கம் வேண்டுமானாலும் திரும்பக் கூடியது. மாடிப்படிகளில் இலகுவாக ஏறவும், ஏணிகளில் ஏறவும் திறன் கொண்டது. தன்னுடன் 3 கமெராக்களைக் கொண்டு செல்லும் திறன் படைத்த இந்த ரோபோ, தீப் பற்றிய கட்டத்துக்குள்சென்று படம்பிடித்து தீயணைப்புக் கட்டுப்பாட்டு அறைக்கு உடனுக்குடன் தகவல் அனுப்பும் திறன் கொண்டது. தீ விபத்தில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் திறனும் இதற்கு உள்ளது.

விஷவாயு பாதித்துள்ள இடங்கள், ஒக்ஸிஜன் குறைவாக உள்ள இடங்கள், வெடிபொருள்கள் மற்றும் பயங்கரமான இடங்களுக்குத் தீயணைப்பு வீரர்களுக்குப் பதில் இந்த ரோபோக்களை அனுப்பி தீயணைப்புப் பணியை மேற்கொள்ளமுடியும் என்று கூறப்படுகிறது. (ஐ)

புளூட்டோவுக்கு விண்கலத்தை ஏவியது நாஸா

கேப் கனவரால்,ஜன.23

சூரிய மண்டலத்தின் கடைக்கோடியில் உள்ள கோளான புளூட்டோவுக்கு 'நியூ ஹொரைசன்ஸ்' விண்கலத்தை அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா வியாழக்கிழமை ஏவியது.

இந்த விண்கலத்தை 'அட்லஸ் வி551' ஏவுகணை சுமந்துசென்றது. புளோரிடாவில் இருந்து உள்ளூர் நேரப்படி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏவுகணை புறப்பட்டது.

வானிலை மாற்றம், மின் தடை காரணமாக இரு தினங்களாக இந்த விண்கலம் ஏவுவது தாமதம் அடைந்துவந்தது. புளூட்டோ கோளை அடைய இந்த விண்கலம் 10 ஆண்டுகள் பயணம்செய்யவேண்டிவரும். பயணம் செய்யவேண்டிய தொலைவு 490 கோடி கி.மீ. அட்லஸ் ஏவுகணை விண்ணில் பறந்த 42ஆவது நிமிடத்தில் அதிலிருந்து விண்கலம் பிரிந்துவிடும். அதன் பிறகு விண்கலத்தின் வேகம் மணிக்கு 58 ஆயிரம் கி.மீ. வரை இருக்கும்.

பயணம் தொடங்கிய 9 மணி நேரத்தில் நிலவை விண்கலம் தாண்டிவிடும். ஆனால், நிலவு அருகே செல்ல அப்பலோ' விண்கலம் 3 தினங்களை எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

காஷ்மீர் பிரச்சினை விரைவில் தீர்ப்பதற்கு ஐ.நா. உதவி கோருகின்றது பாகிஸ்தான்

நியூயோர்க், ஜன.23

இந்தியா-பாகிஸ்தான் இடையே காஷ்மீர் விவகாரம் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாது இருந்து வருகின்றது. இதை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபை உதவவேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ் தெரிவித்தார்.

அமெரிக்கா சென்று அவர் நியூயோர்க்கில் வெளியுறவு கவுன்சில் மற்றும் ஆசிய சமூகக் கூட்டுக் கூட்டத்தில் பேசினார். அப்போது அவர் மேற்கொண்ட கோரிக்கையை விடுத்தார்.

அவர் கூறியதாவது :-

இந்தியா - பாகிஸ்தான் இடையே தற்போது பல்வேறு விஷயங்களில் உறவு மிகவும் மேம்பட்டுள்ளது. இது மகிழ்ச்சி தரும் விடயம். அண்டை நாடுகளுடன் நல்லுறவை மேம்படுத்துவதில் பாகிஸ்தான் அதிக கவனம் எடுத்துக்கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையிலான டில்லி பேச்சு மிகுந்த பயனைத் தரும் என்று நம்புகின்றோம். பேச்சில் இருநாட்டு வெளியுறவுச் செயலர்களும் பங்கேற்றனர். பேச்சு விவரங்கள் தொடர்பாகப் பாகிஸ்தான் ஆலோசனை நடத்தி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

இரு நாடுகள் இடையிலான பஸ், ரயில் போக்குவரத்து தொடர்பாக ஏற்ப்பட்டுள்ள முன்னேற்றம் வரவேற்கத்தக்கது.

இரு நாடுகள் இடையே காஷ்மீர் பிரச்சினை நீண்டகாலமாகத் தீர்க்கப்படாது இருந்து வருவது கவலை தரும் விடயமாகும். இதுதொடர்பாக இந்தியாவிடம் பல்வேறு திட்டங்களைத் தெரிவித்துள்ளோம். இதுதொடர்பாக இந்தியாவிடமிருந்து சாதகமாகப் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

காஷ்மீர் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படவேண்டும் என்று விரும்புகின்றோம். இந்த விஷயத்தில் ஐ.நா. உதவினால் பிரச்சினை குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிவுக்கு வரும் என்று நம்புகின்றோம். ஐ.நா. இப்பணியை மேற்கொள்ளமுன்வர வேண்டும் - என்றார் அஜீஸ். (ஐ)

ஹைதராபாத்தில் நடைபெறும் 72ஆவது அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தலைவர் சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் மூத்த காங்கிரஸ் தலைவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமபுரி எரியும்போது பிடில் வாசிக்கும் நீரோக்கள்

நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி தற்போது இலங்கை அரச நிர்வாகம் முற்றுமுழுதாகச் செயலிழந்து போகும் நிலையே காணப்படுகிறது. இதனைத் தடுத்து நிறுத்த இயலாததென எண்ணத் தோன்றுகிறது.

இவ்விதம் அரசநிர்வாகம் செயலிழப்பதினின்றும் தடுத்து நிறுத்தி எந்தவிதத்திலாவது அதனைச் சீர்செய்யவேண்டுமானால் அவ்வித பின்னடைவு ஏற்படக்காரணமாக அமையும் விடயங்கள் குறித்து ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாகும்.

தற்போது நடைமுறையிலுள்ள ஜனநாயக ஆட்சிமுறை எம்மால் உருவாக்கப்பட்டதொன்றல்ல. ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாளித்துவக் கொள்கையின் பலாபலனே இது. ஜனநாயக நடைமுறையில் செயற்படும் அரசொன்று கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை நிபந்தனைகள் சில வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடப்பதற்கு நாம் எதுவிதத்திலும் அக்கறை செலுத்துவதில்லை. இன்று அரச நிர்வாகம் பின்னடைவு அடைந்துள்ளமைக்குதுக்கியானகாரணம்இதுவேஎனக்கொள்ளலாம்.

ஆங்கிலேயர்களால் உருவாக்கி வழங்கப்பட்ட ஜனநாயக அரசியல் நடைமுறையை வெற்றிகரமாகச் செயற்படவைப்பதற்கு நாம் அக்கறை எடுக்காமைக்கான காரணமென்ன?

சிறுபான்மையினர் புறக்கணிப்பு

நாடு சுதந்திரமடைந்தவேளையில் புதிய தேசிய அரசியல் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், அதனை உரிய வகையில் செயற்படுத்த தேசிய இனஉணர்வுடன் நாம் செயற்படத் தவறியுள்ளோம். தாம் சார்ந்த இனப்பிரிவு, பின்பற்றும் மதம், பேசும் மொழி மற்றும் தாம் சார்ந்த குலம் என்பவற்றால் எம்மிடையே பிளவுகள் நிலவின. பதவிக்கு வந்த அரசுகள் பரந்த நோக்கின்றி நாட்டின் பெரும்பான்மை மக்களது மதம், பெரும்பான்மை இனத்தவரின் மொழி மற்றும் பெரும்பான்மையினரது குலம் ஆகியவற்றை முன்னிறுத்திச் செயற்படுவதில் ஆர்வம் காட்டின. இதன் பயனாகச் சிறுபான்மை இனத்தவர், சிறுபான்மையினர் பேசும் மொழி மற்றும் சிறுபான்மையினரின் குலம் ஆகியவை மதிக்கப்படாது அலட்சியப்படுத்தப்பட்டன.

சிறுபான்மையினருக்கு நியாயமான உரிமைகள் கிட்டாமையால் அவர்கள் ஆளும் வர்க்கத்தின் மீது அதிருப்தி அடைய நேர்ந்தது.

நாட்டில் சகல துறைகளிலும் சகல மட்டங்களிலும் ஊழல்கள், மோசடிகள் மலிந்து காணப்படுகின்றன. இதற்கு நாட்டின் தலைவர்கள் கூட விதிவிலக்கில்லை. இதுகுறித்து ஆராய்கிறார் பிரபல பத்திரிகையாளர் விக்டர் ஐவன். 'ராவய' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

தமக்கான அடிப்படை உரிமைகள் ஆளும் வர்க்கத்தினரால் மறுக்கப்பட்ட காரணத்தால் அத்தகைய ஆளும் வர்க்கத்தினர் வசமிருந்த அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கிலோ அல்லது அத்தகைய ஆளும் அதிகாரத்தைக் கொண்டிருந்த பெரும்பான்மை இனத்திடமிருந்து பிரிந்து, தமக்கெனத் தனியான அரசொன்றை நிறுவும் நோக்கிலோ சிறுபான்மை இனத்தவர் ஆயுதப் போராட்ட வழியை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

1971 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியுடன் ஆரம்பித்த இத்தகைய போக்கு நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் சிறுபான்மைஇனத் தமிழ்மக்களது போராட்டம் வரை விரிந்து வியாபித்தது. இதன் பயனாக அரச நிர்வாகம் பலவீனமடைந்து நாட்டின் பொருளாதார, சமூக முன்னேற்றங்கள் யாவும் வீழ்ச்சியடைந்தன.

சமூக மனமாற்றம் ஏற்படவில்லை

பரம்பரை அரசியல் நடைமுறையிலிருந்து முதலாளித்துவ அரசியல் நடைமுறைக்கு மாற்றமுறும்வேளை அதற்கு அவசியமான சமூக மனமாற்றத்தை ஏற்படுத்தாமலேயே ஆங்கிலேயர்களால் ஜனநாயக அரசியல் நடைமுறை இந்த நாட்டில் புகுத்தப்பட்டது. ஆகையால் தமக்குப் பழக்கமான பரம்பரை அரசியல் நடைமுறை மேற்கொள்ளப்பட்டவிதத்திலேயே வெகுமதியாகக் கிடைத்த புதிய அரசியல் நடைமுறையையும் இலங்கையர்கள் மேற்கொள்ள நேர்ந்தது.

பொதுமக்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச தலைவர்கள் அத்தலைமைப் பதவி தமக்கு தமது குடும்பத்தவரிடமிருந்து நன்கொடையாகக் கிடைத்ததெனக் கருதி நிர்வாகத்தை மேற்கொண்டு வந்தனர்.

அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆளும்கட்சிகளுக்கு புதிய ஜனநாயக அரச நடைமுறைக்கேற்ற அதிகாரப்பகிர்வு குறித்துப் போதிய தெளிவு இருக்கவில்லை.ஆதலால், அவ்வித அதிகாரப் பகிர்வு மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்துத் தெளிவான அறிவும் அவர்களுக்கு இருக்கவில்லை. இதனால், அதிகாரத்தைக் கைப்பற்றிய சகல அரசியல் தலைவர்களும் பழைய அரசர்களின் ஆட்சிமுறை போன்று சகல அரசதுறைகளிலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்தமுனைந்தனர்.

குறிப்பாக, சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்படவேண்டிய முக்கிய மூன்று நிர்வாக அலகுகளான அரசமைப்பு, நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றம் ஆகியவற்றின் செயற்பாடுகளிலும் தலையிட்டுக் குறுக்கீடு செய்தனர்.

மக்களால் ஆட்சியில் அமர்த்தப்பட்ட ஆளும்கட்சிக்கு விசுவாசமாகச் செயற்படவேண்டியது தமது கடமை எனக்கருதி அவர்கள் செயற்பட்டனர். அதிகாரத்தில் அமர்ந்த ஆளும்கட்சிகள் வழக்கம்போலவே பொறுப்பான பாத்திரத்தை வகிக்காது கொள்ளைக்காரர்களின் பாணியில் செயற்பட ஆரம்பித்தன. வெற்றிபெற்ற ஆளும்கட்சிக்கு அதிக உச்ச அளவில் சொத்துகளைக் கொள்ளையிடுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவது தமது பொறுப்பு என அதிகாரிகள் எண்ணியவேளையில் நீதி நிர்வாகத்தின் நிலைப்பாடும் அவ்வாறே அமைந்தது.

அரசுகளின் இத்தகைய போக்குக் காரணமாக இன்று நாட்டின் அரசியல் செயற்பாடுகளில் உள்ளகச் சிக்கல்கள் தலைவிரித்தாடுகின்றன. இத்தகைய நிலையைத் தெளிவுபடுத்திக் காட்டுவதற்குக் கீழ்க்குறிப்பிடப்படும் சம்பவங்கள் உதாரணமாக அமைகின்றன.

சந்திரிகா பெற்ற நிலம்

சந்திரிகா ஒரு நாட்டின் அரசிபோன்று இந்த நாட்டை நிர்வகித்து தமது பதவிக் காலத்தைப் பூர்த்திசெய்யும் நிலையிலிருந்த காலகட்டம் அது.

அந்தவேளையில் நகர அபிவிருத்தி அமைச்சரை அழைத்த சந்திரிகா, தாம் நாட்டின் அபிவிருத்திக்காக ஆற்றிய சேவைகள் குறித்தும், அதற்காக தமக்குக் கிட்டவேண்டிய சலுகைகள் குறித்தும் விரிவாக விவரித்தார். தமது கணவர் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தது குறித்தும் பின்னர் தாம் நாட்டுக்குச் சேவையாற்றும் வேளையில் தமது ஒருகண் பார்வையை இழக்க நேர்ந்தமை குறித்தும் விவரித்தார். இவற்றுக்காகத் தாம் இழப்பீடு எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் பதவியிலிருந்து இளைப்பாறுவதன் மூலம் கிட்டவுள்ள சலுகைகளைக் கூடத் தாம் அனுபவிக்க எதிர்பார்க்கவில்லை எனவும் சந்திரிகா அவருக்கு எடுத்துக்கூறினார். ஆதலால் தாம் கோரும் நிலத்துண்டு ஒன்றை மட்டும் தமது பெயருக்கு உரிமையாக எழுதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவரைச் சந்திரிகா கேட்டுக் கொண்டார்.

சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவிவகித்த வேளையில் புதிதாக ஜனாதிபதி மாளிகை ஒன்று அமைக்க விரும்பி 80 கோடி ரூபா செலவிட்டு அபிவிருத்திசெய்யப்பட்ட காணித்துண்டு ஒன்றினையே தமது பெயருக்கு எழுதித் தருமாறு சந்திரிகா அவரை வேண்டிக்கொண்டார். அது ஒரு ஏக்கர் 2 றூட் பரப்பளவு கொண்ட சிறிய காணித்துண்டாகும். அப்போதைய சந்தை நிலவரப்படி அதன் பெறுமதி 30 கோடி ரூபாய்களாகும். பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ள சந்திரிகாவின் அந்தவேண்டுகோளை ஏற்று நகர அபிவிருத்தி அமைச்சரும் அமைச்சரவையின் அனுமதிபெற்று குறிப்பிட்ட அந்தக் காணித்துண்டை வழங்கி ஓய்வு பெறும் அரசியின் தயவான வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தார்.

ரணிலின் அழிச்சாட்டியம்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவைக் கண்ணியமான மனிதரெனக் குறிப்பிடும்வகையில் 'மிஸ்டர் கிளீன்' எனக்கூறுவர். தற்போது அந்த 'சுத்தமான கண்ணிய வானுக்கு' எதிராக ஐ.தே.கட்சியினுளளேயே உள்ளகச் சதி தோன்றியுள்ளது.

ரணிலைக் கட்சியின் தலைமைப் பொறுப்பினின்றும் அகற்றிவிடுவது இச்சதிகாரர்களின் முக்கிய திட்டமாகும். ஆனால், தாம் உயிரோடிருக்கும் வரை ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியைக் கைவிட ரணில் இன்று தயாராயில்லை.

தற்போது ஐ.தே.கட்சிக்குள் ரணிலுக்கு எதிரான சதிகாரர்கள் தமக்குத் தொடர்பேயில்லாத அநாவசிய விடயங்கள் குறித்துக் கேள்வி எழுப்பும் நிலைவரை சென்றுள்ளார்கள். கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் வெளிநாடுகளிலிருந்து ஐ.தே.கட்சிக்குக் கிடைத்த 50 லட்சம் அமெரிக்க டொலர் (50 கோடி ரூபா) மற்றும் வேறு பல உதவிகள் குறித்த விவரங்களை வெளியிடுமாறு அவர்கள் ரணிலைக் கோரியுள்ளனர்.

எந்தவொரு கட்சித் தலைவரிடமும் கட்சி உறுப்பினர்கள் எழுப்பக்கூடாத விதத்திலான கேள்வி இதுவாகும். அந்தியகாலச் சகாயநிதிச் சங்கத்தின் வரவு -செலவுக் கணக்குக் குறித்துத் தலைவரிடம் இவ்விதம் கோரஇயலும். ஆனால், அரசியல் கட்சியொன்றின் தலைமைத்துவம் இத்தகைய கேள்விக்கு எவ்வாறு பதிலளிக்கமுடியும். கிடைக்கும் நிதியுதவியை உரியவகையில் செலவிடுவதற்கு கட்சியின் தலைவருக்கு உரிமை இருந்தாக வேண்டும். இது நாட்டின் சகல கட்சித் தலைமைத்துவங்களுக்கும் உரிய உரிமையாகும்.

பொலிஸ்மா அதிபரின் ஊழல் தொடர்புகள்

முன்னாள் பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா தற்போது லஞ்ச ஊழல் விசாரணைக் குழுவில் அங்கத்துவம் வகித்துவருகிறார்.ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடார் என்ற சந்தேகத்தின் பேரில் பொரளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியொருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து அவருக்கும் இந்திரா டி சில்வாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளமை வெளிவந்துள்ளது.அந்தப்பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்ட வேளையில் அவரது மனைவியின் (அவரும் ஒரு பொலிஸ் அதிகாரியே) கைத்தொலைபேசிக்கு கிடைத்த அழைப்பு இந்திர டிசில்வாவிடமிருந்தே கிடைத்ததாக உறுதிப்படுத்தப்படுகிறது.

தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டவராக இந்திரா டி சில்வாவின் பெயரும் விலாசமுமே அப்பெண் பொலிஸ் அதிகாரியின் கைத்தொலைபேசியில் பதிவாகியுள்ளது.

பொரளை கோதமி வீதியில் அமைக்கப்பட்டு வரும் மாடி வீடொன்றின் கட்டடவேலைகளில் ஈடுபட்டுவரும் தொழிலாளர் சிலர் பொலிஸாருக்கு வழங்கிய சாட்சியத்தில் லஞ்ச ஊழல்

அதிகாரத்தில் அமர்ந்த ஆளும் கட்சிகள் வழக்கம் போலவே பொறுப்பான பாத்திரத்தை வகிக்காது கொள்ளைக்காரர்களின் பாணியில் செயற்பட ஆரம்பித்தன. வெற்றிபெற்ற ஆளும்கட்சிக்கு அதிக உச்ச அளவில் சொத்துகளைக் கொள்ளையிடுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவது தமது பொறுப்பு என அதிகாரிகள் எண்ணிய வேளையில் நீதி நிர்வாகத்தின் நிலைப்பாடும் அவ்வாறே அமைந்தது.

விசாரணைக் குழுவின் உறுப்பினராகக் கடமையாற்றிய சமயம் இந்திரா டி சில்வா அடிக்கடி அக்கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை மேற்பார்வையிட வந்துசென்றார் எனவும் அக்கட்டட நிர்மாணம் குறித்து ஆலோசனைகள் வழங்கிவந்தார் எனவும் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி, போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவோரை அழித்தொழிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட விசேட பொலிஸ் படையணி இந்திர டி சில்வா பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றிய வேளையில் கலைக்கப்பட்டது என்ற இரகசியமும் இந்த விசாரணைகளின் போது வெளிவந்துள்ளது.

சந்தகிரியின் மோசடி

அட்மிரல் தயா சந்தகிரி முன்னாள் கடற்படைத் தளபதியாகவும், [illegible] கடமையாற்றிவருகிறார். அதுமட்டுமன்றி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய பாதுகாப்பு அதிகாரியாகவும் விளங்கினார்.

இவரது செயற்பாடுகள் குறித்து வெளிவந்த தகவல்கள் இலங்கையின் முப்படைகளுள்ளும் நிலவும் ஊழல்கள் குறித்து வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

அட்மிரல் தயாசந்தகிரி கடற்படைத் தளபதியாகக் கடமையாற்றிய வேளையில் இடம்பெற்ற நூறுகோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியுடைய கொள்வனவுக் கட்டளையொன்று தற்போதைய அரசினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

புத்தம் புதிய பீரங்கிகளெனக் கூறி இவர் கொள்வனவு செய்ய முயன்ற பீரங்கிகள் 20 வருட காலப் பழமை வாய்ந்தவை என்ற உண்மை தற்போது வெளியாகியுள்ளது. இத்தகைய பீரங்கிகளை இஸ்ரேல் நாட்டு நிறுவனமொன்றிடமிருந்தே விலைக்கு வாங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான உடன்படிக்கை 2004 டிசம்பர் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பான மொத்தச் செலவீனம் 107 கோடி ரூபாய்களாகும். இதற்கான முற்பணமாக 21 கோடியே 82 லட்ச ரூபாய்களாகச் செலுத்தப்பட்டன.

இந்தப் பீரங்கிகள் 2005 ஜூன் மாதமளவில் கொழும்பை வந்தடைய வேண்டிஇருந்தபோதிலும் அந்த நிறுவனத்தால் அவற்றை உரிய நேரத்தில் வழங்கமுடியவில்லை. பீரங்கிகளின் வழங்குநர்களான குறிப்பிட்ட நிறுவனம், பிரித்தானிய கடற்படையின் போர்க்கப்பல்களில் பொருத்தப்பட்டிருந்த 20 வருடங்கள் பழமைவாய்ந்த அந்தப் பீரங்கிகளை அக்கப்பல்களினின்றும் அகற்றி எடுத்து வந்து வழங்குவதில் ஏற்பட்ட தாமதமே இதற்கான காரணமாகும்.

மொத்தத்தில் புத்தம்புதிய 30 மில்லிமீற்றர் கடற்படைத் தாக்குதல் பீரங்கிகள் எனக்கூறிக் கொள்வனவுசெய்ய முயன்றவை பிரித்தானியக் கடற்படையால் பாவனைக்கு உதவாதவை என அகற்றப்பட்ட 20 வருடகாலப் பழமைவாய்ந்த பீரங்கிகளே என்ற உண்மை தற்போது அம்பலமாகியுள்ளது.

அரச செயற்பாடுகளில் எத்தகைய ஊழல் மலிந்துகாணப்படுகிறது என்பதற்கு மற்றுமொரு உதாரணம் இதுவாகும்.

சீருடைத் துணியை விழுங்கிய பெருச்சாளிகள்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி அமைச்சின் 2003 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையின்படி பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணி விநியோகம் தொடர்பாகத் தேவைப்பட்ட அளவு துணியை சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய ஆரம்பித்தது முதல் சீன அரசு வருடாவருடம் 5 லட்சம் மீற்றர் துணியைக் கட்டணம் அறவிடாது அன்பளிப்பாக வழங்கி வந்துள்ள தகவல் வெளியாகியுள்ளது. இவ்வாறு 2002 ஆம் ஆண்டுவரை வருடாவருடம் சீன அரசால் இலவசமாக வழங்கப்பட்டு வந்த 5 லட்சம் மீற்றர் துணி விநியோகிக்கப்படாது களவாடப்பட்டுள்ள விடயம் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

2002ஆம் ஆண்டில் பிரதேசச் செயலர் காரியாலய மட்டத்தில் மட்டும் 480 ஆயிரம் மாணவர்களுக்கான சீருடைப்பொதிகள் மாயமாகியுள்ளன. இது ஒரு பிரதேச செயலர் காரியாலயத்திற்கு 240 பைக்கற்றுகள் என்ற கணக்கில் அமைகிறது. அதேசமயம் அமைச்சு மட்டத்தில் இவ்விதம் 575 ஆயிரத்து 862 இலவசச் சீருடைப் பொதிகள் காணாமற்போயுள்ளன.

இத்தகைய உதாரணங்கள் மூலம் இலங்கை அரசின் சகல நிர்வாக மட்டங்களிலும் ஊழல்கள் மலிந்திருப்பதைத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் யுத்த அச்சுறுத்தல் இல்லாதிருப்பினும் கூட இந்த அரசுக்கு சுமுகமான, நியாயமான நிர்வாகத்தை மேற்கொள்வது சிரமமான தொரு செயற்பாடே.

இத்தகைய குழப்பங்கள் மலிந்த அரசுக்கு மேலும் சிக்கல்களை பிரபாகரன் உருவாக்கி வருகிறார். இலங்கை அரசு உடைந்து சிதறும்வேளை அதன் சிதறல்கள் பிரபாகரனின் தனியரசிலும் சிதறிப் பறந்து வீழ்ந்து இவ்விரு அரசுகளுக்கும் ஒரேவித நாசத்தை ஏற்படுத்தத்தக்க நிலை ஏற்படவும் இடமுண்டு. ✸

தமிழில்: **வியெஸ்ரி**

ஊழல்களில் அமிழ்ந்து ஆடிப்போயிருக்கும் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடி நகரில் படையினர் சோதனைக்கெடுபிடி எனப்புகார்

கரவெட்டி,ஜன.23

நெல்லியடி நகரப்பகுதியில் படையினரின் கெடுபிடிகள் நாளுக்குநாள்அதிகரித்து வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெல்லியடிச் சந்தை, பஸ் தரிப்பிடம் உள்ளிட்ட பகுதிகளில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுவரும் படையினர் சோதனை என்ற பெயரால் வயது வேறுபாடின்றி பொதுமக்கள் மீது கெடுபிடிகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக அப்பகுதியால் செல்லும் இளைஞர்களை வழிமறிக்கும் படையினர் அவர்களிடம் படையினரால் ஏற்கனவே வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றைப் பரிசோதித்து வருகின்றனர்.இதன் போது படையினரால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டைகள் வைத்திராத இளைஞர்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை - அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் உட்பட சகல வாகனங்களையும் நிறுத்துவதற்கும் அவற்றிற்கு முன்பாக பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக நிற்பதற்கும் படையினர் தடைவிதித்துள்ளனர்.

இதனால் வர்த்தகர்களும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (எ-6-70)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்

திரு. கா. இராமஜெயம் அவர்களின் அன்புத் தந்தை

கந்தையா கார்த்திகேசு

அவர்கள் 20.01.2006 இல் இறைபதம் எய்திய செய்திகேட்டு ஆழ்ந்த துயருற்றோம்.அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

நெல்லியடி, மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி. **பாடசாலைச் சமூகம்.**

(கி-47475)(54-18-17-34)

கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 28 - 06 - 1927

விண்ணில் 19 - 01 - 2006

அமரர் **சின்னத்தம்பி கந்தையா**

(பழைய மாணவர் சங்கச் செயலர் க.சண்முகலிங்கத்தின் தந்தை)

அவனியில் வந்து அழகுற வாழ்ந்து
தவமுயர் நெறியில் தகுதிகள் சேர்த்து
சிவனவன் செல்வன் திருவடி சூழ்ந்து
கவலைகள் துறந்தெமைக் கவலையுள் ஆழ்த்தினார்.
கண்ணீர் அஞ்சலிக் காணிக்கை வைத்து
அன்னார் குடும்பத்தார் அமைதிக்காய் பிரார்த்தித்தோம்.

யா/டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி. (கி-47474) (54-18-17-34)

துயர் பகிர்பவர்கள்:
அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கத்தினர்,
அபிவிருத்திச் சங்கத்தினர்.

20ஆவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 - 08 - 1960

உதிர்வு 23 - 01 - 1986

அமரர் **ஆரூர் செந்தில்குமாரி (லதா)**

நீதி: நியோதரி 27.01.2006

வருவதும் போவதும் உலக வழக்கு
வந்ததும் போகாது ஒரு ரகம்
வாழ்ந்து மறைவது பிறிதொன்று
பாதியில் போவது
தாங்க வொணாதது!

மயிலணி வடக்கு, சுன்னாகம். (45879) (54-18-17-34)

தகவல்: குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

செல்லப்பா தில்லையம்பலம்

புங்குடுதீவு, ஆறாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 16/3, கன்னாரத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தில்லையம்பலம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் கணவரும் காலஞ்சென்ற பாலகிஷ்னன், காலஞ்சென்ற தளையசிங்கம், கொழும்பு வர்த்தகர் லோகநாதன் ஆகியோரின் தந்தையும் கமலபாக்கியம், பாக்கியம் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற வர்களான பேரம்பலம், குமாரசாமி, சிவசாமி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்குடுதீவு. (45705) (18-17-34)

தகவல்: **சி.லோகநாதன்**(பெறாமகன் - S.L.P.)

மணமகள்தேவை

யாழ்.இந்து உயர்குலம்,1965 ஆம் ஆண்டு பிறந்த, சொந்தத் தொழில் நடத்தும் பிரித்தானிய நிரந்தர வதிவுடமையுடைய விவாகரத்துப் பெற்ற,மணமகனுக்கு 32 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை.சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு-விளம்பர இல.2788 மே/பா உதயன். (45908)

தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) விற்பனை உதவியாளர் மற்றும் கணனி கையாள்வதில் அனுபவம் உடைய ஒருவரும் தேவை.

தொடர்பு: 077 9588433 (45902)

அலுவலக உதவியாளர் தேவை

எமது நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் (Peon) உடன்தேவை.

இன்று அல்லது நாளை நேரில் சமுகந்தரவும்.

Saams Tech (45903)

89, Hospital Road, Jaffna. T.P.: 021-4591571
841, Kasthuriyar Road, Jaffna. T.P.: 021-2229505

மனோகரா யாழ்ப்பாணம்

அதிரடி பொங்கல் வெளியீடு

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநேர வெளியீடு
(Dts நவீன ஒலிநயத்துடன்)
ஆதி

இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)

தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா

தினசரி: மு.ப. 10.30, 1.30, 4.30, 7.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

பொங்கல் வெளியீடு

அல்டிமேட் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்

காட்சி நேரம்: 9.00, 12.30, 3.30

ராஜா யாழ்ப்பாணம்

சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா

இயக்கம்: K.S.ரவிக்குமார்

ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்: பு.ப. 10.30, 2.15 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்

விஷால், மீராஜாஸ்மின் மற்றும் பலர் நடித்த
சண்டக்

தினசரி:

மரண அறிவித்தல்கள்

வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

(வடா- பிரபல கொழும்பு பழக்கடை வியாபாரி)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சில்லாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை நேற்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் இராஜகுமாரி, விஜயகுமாரி, இராஜரட்ணம் (பிரான்ஸ்) காலஞ்சென்ற இந்திரகுமாரி, விஜயரட்ணம் (ஜேர்மன்), பிரேமகுமாரி (லண்டன்), கிருஷ்ணகுமாரி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு. (45909) (18-17-34)

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

செல்வி ஜோசவ் கில்டா ஜெயராணி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி ஜோசவ் கில்டா ஜெயராணிஅவர்கள் 20.01.2006 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2006)திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/8,அடப்பன் வீதி, யாழ்ப்பாணம். (45910) (18-17-34)

தகவல்: அருளம்மா ஜோசவ்(தாய்).

திருமதி ஐயாத்துரை கங்காபாய் (பூமணி)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை கங்காபாய்நேற்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை மல்லாவியில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி ஐயாத்துரை (ஓய்வுபெற்ற காணித் தணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் மீனாக்குமாரி (மல்லாவி), பாலகங்காதரன் (அதிபர், யா/வேலணை கிழக்கு ஐயனார் வித்தியாலயம்), ஜமுனாராணி (சுவிஸ்), பானுமதி (பிரதம லிகிதர், பிரதேச செயலகம், துணுக்காய்) ஆகியோரின் அன்புத் தாயும் மனோகரன் (ப.நோ.கூ.ச. துணுக்காய்), ஜெயமதி (மானிப்பாய்), கண்ணன் (சுவிஸ்), காந்தரூபன் (ICRC மல்லாவி) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிவேதி, மதுரங்கன், சுரேஸ்குமார் (மல்லாவி), பாலதாரங்கன், தஷானி (மானிப்பாய்), ஆர்த்தி, அசோக், அஜித் (சுவிஸ்), கஸ்தூரி (மல்லாவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது மல்லாவி இல்லத்தில் இன்று (23.01.2006) திங்கட்கிழமை நடைபெற்று தகனக் கிரியைகள் மல்லாவி இந்து மயானத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மல்லாவி. (45907) (18-17-34)

தகவல்: **ஐ.பாலகங்காதரன்**(மகன்).

சின்னத்தம்பி மயில்வாகனம்

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மயில்வாகனம் அவர்கள் நேற்று(22.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் மாணிக்கம் தம்பதியரின் மகனும் மகேஸ்வரன், கந்தையா, நாகேஸ்வரி, சிவநேஸ்வரி, ஞானேஸ்வரி, வேல்முருகன், ரதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகம்மா, ஜெயவதி, செல்லத்துரை, குமாரசாமி, செல்வராசா, தபோதினி, அனுசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2006)திங்கட்கிழமை முற்பகல்11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதி, புத்தூர்.
தொடர்பு இல.077 6153779 (45906) (18-17-34)

தகவல்: **குடும்பத்தினர்.**

செல்லர் இலட்சுமிப்பிள்ளை(நல்லபிள்ளை)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் பத்த மேனி வைரவர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் இலட்சுமிப்பிள்ளை 19.01.2006 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்லர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கதிராசி தம்பதியரின் மகளும் கந்தையா- குழந்தை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் சரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசிங்கம்(பிரான்ஸ்), துரைசிங்கம், இரத்தினசிங்கம், தர்மகுலசிங்கம்(சுவிஸ்), புவிராஜகுலசிங்கம் (சுவிஸ்), குமாரகுலசிங்கம், விஜயகுலசிங்கம் (பிரான்ஸ்), ராசகுலசிங்கம்(பிரான்ஸ்),காலஞ்சென்ற இராசகுமாரி மற்றும் ஜெயவீரகுலசிங்கம்(பிரான்ஸ்), சிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை 24.01.2006 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி. (45904) (18-17-34)

தகவல்: **செ.துரைசிங்கம்** (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் பேசத் தயார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''என்னுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளுங்கள். இதற்கு முன்னர் பல தடவை கள் அமைதி முயற்சிகளுக்காக சர்வகட்சி மாநாடுகள் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தந்தச் சமயங்களில் ஏதோ ஒருகட்சிதானும் எதிர்த்துப் பகிஷ்கரித்து அவற்றைக் குழப்பியிருக்கின்றன. ஆனால் நான் கூட்டிய சர்வகட்சி மாநாட்டில் நான் அழைத்த சகல கட்சிகளும் - அனைத்துத் தென்னிலங்கைச் சக்திகளும் - பங்கு பற்றியிருக்கின்றன. புலிகளுடன் பேசுவது பற்றிய விடயத்தை அங்கு ஆராய்ந்து, தெற்கில் அது குறித்து ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி அது என்பதால், புலிகள் ஆதரவுப் போக்குடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மாத்திரம் நான் அழைக்கவில்லை. ஏனைய - நான் அழைத்த - அனைத்துக் கட்சிகளுமே அந்த மாநாட்டில் பங்குபற்றின. அது மட்டுமல்லாமல் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுமே அந்த மாநாட்டில் பங்கு பற்றி எனது முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க உறுதி அளித்தன; ஆணை தந்தன.

'' இவ்வாறு தென்னிலங்கையில் முழுத் தரப்பினரதும் ஆதரவோடு சமாதான முயற்சிகளுக்கு களத்துக்கு வந்திருப்பவன் நான். ரணில் விக்கிரமசிங்கவுக்குக்கூட அத்தகைய ஆதரவு இருக்கவில்லை.

''அத்தகைய ஆதரவுடன் இந்த விவகாரத்தை நான் முன்னெடுத்தால்தான் பாதிக்கப்பட்ட தமிழர்கள் உட்பட அனைவருக்குமான நியாயமான - தீர்வு ஒன்றை என்னால் பெற்றுக்கொடுக்க முடியும்.

''ஆகவே, எங்கே பேசுவது என்ற விவகாரத்தை சிக்கலாக்கி, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு எனக்குள்ள காலத்தைச் சிதைவடையச் செய்துவிடாதீர்கள்.'' - என்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

''ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்ற போது அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு தங்கத் தாம்பாளத்தில் வைத்து அவருக்கு அளிக்கப்பட்டது. சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் கூடிய ஓர் அமைதிச் சூழ்நிலை அப்போது நாட்டில் நிலவியது. ஆனால், பதினொரு ஆண்டுகள் கடந்தும் எதுவும் நடக்கவில்லை.

''ஆனால், ஜனாதிபதிப் பதவி அதிகாரத்தை நான் பொறுப்பேற்கும் போது நாட்டின் நிலைவரம் என்னவென்பது உங்களுக்குத் தெரியும். பதற்றமும், தரப்புகளுக்கு இடையேயான புரிந்துணர்வின்மையும், மோதல் நிலைமையும் என்று சிக்கல்கள் உள்ளன.

''இவற்றுக்கு மத்தியில்தான் சமாதானத்தை முன்னெடுப்பதற்கான முழுஆதரவு வலுவைத் தென்னிலங்கையில் பெற்றுக்கொண்டு நான் முயற்சியில் இறங்கியிருக்கிறேன்.

''என்னை யதார்த்தவாதி என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டிருக்கின்றார்.

''யதார்த்தவாதியாக நான் செயற்பட்டு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு எனக்கு வாய்ப்பளிக்க வேண்டாமா?

''அதிகாரத்தைக் கையிலெடுத்து எல்லாவற்றையும் நேர்சீர் ஒழுங்குக்குள் கொண்டு வருவதற்கு முன்னர் - அதற்கு வாய்ப்பும் காலமும் அளிக்காமல் - திடீரென ஒரு தலைப்பட்சமாகத் தாக்குதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் நான் என்ன செய்வது?''

''பாதுகாப்புக் கட்டமைப்பை ஓர் ஒழுங்கு முறைக்குள் நான் கொண்டுவருவதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் என்னைப் பார்த்து நீங்கள் ('உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர்) யுத்த முனைப்போடு எனது அதிகாரம் தமிழர்களைக் கையாள்வது ஏன் என்று கேள்வி எழுப்பினால் நான் என்ன கூறமுடியும்?

''விடுதலைப் புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து முன்னர்போல் முழு அளவில் அரசியல் நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபடவேண்டும். தமிழ் மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளாக அவர் தோற்றுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

''அவர்கள் அதற்காகத் தமது மக்கள் மத்தியில் முற்றாக ஒன்றுபட்டு அரசியல் பணி ஆற்றவேண்டியது அவசியம். அதற்கு வாய்ப்பான சூழலை - பாதுகாப்பை - உறுதிப்படுத்துவது அரசினதும் எனதும் பொறுப்பு என நீங்கள் கூறுவதை ஏற்கிறேன்.

''அந்தச் சூழ்நிலையை நிச்சயமாக என்னால் உறுதிப்படுத்த முடியும். ஆனால், அது ஒருதலைப்பட்சமாகச் செய்யக் கூடியதல்ல. பரஸ்பர புரிந்துணர்வோடு - உடன்பாட்டுடன் - முன்னெடுக்கப்பட வேண்டியது. அதை என்னோடு இணைந்து முன்னெடுக்க முன்வாருங்கள் என்று புலிகளின் தலைமைக்கு அழைப்பு விடுக்க விரும்புகிறேன்.

''நிறைகுறைகளை - குறைபாடுகளை - பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

''கடந்த காலத்தில் கண்ட உடன்பாடுகள், ஏற்பாடுகளை விட்டுவிடுங்கள்.

''இது புதிய அரசு. புதிதாகப் பேசுவோம். புதிய அணுகுமுறையில் விடயங்களைக் கையாண்டு தீர்வு காண்போம். புதிய தொடங்குதலுக்கு ஆயத்தமாக வாருங்கள்.

''நீங்கள் (புலிகள்) தனித் தமிழீழம் என்கிறீர்கள். நாங்கள் ஒற்றையாட்சி என்கிறோம். இதை வைத்துக்கொண்டு பேசத் தொடங்குவோம். புதிய தீர்வை - இரண்டுக்கும் நடுவில் - எட்டுவோம்'' - என்றார் ஜனாதிபதி.

''சமஷ்டி முறையிலான தீர்வுகுறித்து.....?'' - என்று கேட்டபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியதாவது:-

''பெயர்களை விட்டு விடுங்கள். இதுதான் தீர்வு, இந்த அடிப்படையில்தான் அது அமையவேண்டும் என்று எதையும் எனது சிந்தனையாக நான் திணிக்க விரும்பவில்லை.

''புலிகள் மீது அரசோ அல்லது அரசு மீது புலிகளோ எதையாவது திணித்து ஒப்பேற்றலாம் என்றால் அது நடக்காத காரியம் என்பது தெளிவு. அரசின் தொண்டைக் குழிக்குள் புலிகளோ, புலிகளின் தொண்டைக் குழிக்குள் அரசோ எதையும் பலவந்தமாகத் திணிக்க முடியாது.

''எனவே, நான் திறந்த மனதுடன் இந்த விடயத்தை அணுக விரும்புகிறேன். ஆகவே சமஷ்டி, அது, இது என்ற கட்டுக்குள் விடயங்களை வைத்துக்கொண்டு இதற்குள்தான் தீர்வு என்று நிபந்தனை போடாமல் புதிய ஆரம்பமாக இந்தப் பேச்சு முயற்சியைத் தொடங்குவோமே...!'' என்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

''துணைப்படைக் குழுக்கள், உதிரிக் குழுக்கள் எனப் பல இயங்குகின்றனவே. அதனால் தானே பல்வேறு பிரச்சினைகளும்.....?'' - என்று கேட்டபோது அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியதாவது:-

''இவை பற்றி எனக்குத் தெரியும். பல்வேறு பின்புலங்கள் உள்ளன ஏற்கனவே கட்டவிழ்த்து விடப்பட்ட பல சிக்கல்கள் உள்ளன. அவற்றையெல்லாம் கட்டுக்குள் கொண்டு வரவேண்டும். அதற்கான வாய்ப் பையும் சூழ்நிலையையும் விட்டுத் தாருங்கள் என்றே கோருகிறேன். ஒரே நாளில் இவற்றைச் செய்ய முடியாது.

''அரசியல் நடவடிக்கைகளை இராணுவச் செயற்பாடுகள் முந்திக்கொண்டு நின்றால் நான் என்ன செய்வது? எதை முன்னெடுப்பது? எதை இழுத்துப் பிடிப்பது?

'' இதுவிடயத்தில் இயன்ற விரைவில் உறுதியான முடிவுகளை எடுப்பேன். அதற்கான பின்புலம் எனக்குத் தேவை.

''பல மட்டங்களில் பலரை - பல சக்திகளை - கையாள வேண்டும். எம்முடன் தொடர் பற்ற பல சக்திகளும் இதற்குள் உள்ளன.'' - என் றார் ஜனாதிபதி.

''முஸ்லிம்களுக்குத் தனித்தரப்புக் குறித்து உங்கள் கருத்து என்ன...?'' - என வின வியபோது ஜனாதிபதி கூறியதாவது:-

''இதுபற்றி சில முஸ்லிம் தலைவர்கள் என்னுடன் பேசினார்கள். இது புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய விடயம். இதற்குள் தலையிட்டுக் குழப்பாதீர்கள் என்று அவர்களிடம் கூறிவிட் டேன்.

''இயலுமானால் பிரபாகரனுடன் போய்ப் பேசுங்கள். அவருடன் ஒரு தரப்பாக வாருங்கள். அல்லது அரசுடன் இணைந்து வாருங்கள்

''தனித்த முஸ்லிம் தரப்பு என்பது உரிய காலம் வரும்போது - சூழலும் சந்தர்ப்பமும் வரும்போது - கவனிக்கப்படலாம்.

''இப்போது முரண்பட்டு - யுத்தத்தில் மோதுண்டு - நிற்கும் தரப்புகள் பேசித் தீர்க்க வேண்டிய விடயங்கள் உள்ளன. அதற்கு வாய்ப்பளியுங்கள் என்று அவர்களிடம் கூறியுள்ளேன்.'' - என்றார் ஜனாதிபதி.

''நோர்வேயில் பேச்சில்லை; ஜனாதிபதி திட்டவட்டம்! புலிகளின் மிரட்டலுக்கு அடி பணிந்து எதையுமே செய்யவேமாட்டாராம்'' - என்ற தலைப்பில் நேற்றைய ' உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளில் வெளியான தலைப்புச் செய்தி குறித்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தமது ஆதங்கத்தை ஆசிரியரிடம் வெளியிட்டார்.

ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் தாம் நடத்திய பேச்சுகளின் போது தாம் குறிப்பிட்ட சில கருத்துகள் திரிபுபடுத்தப்பட்டுவிட்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி, ஒருவரை ஒருவர் (அரசும், புலிகளும்) மிரட்டி ஒன்றைச் செய்விக்கக்கூடாது, அது சாத்திய மற்றது என்ற சாரப் படத் தாம் தெரிவித்த கருத்து பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டுவிட்டது என்றும் குறிப்பிட்டார்.

(உ)

புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து இந்தப் பேட்டியை ஜனாதிபதி ஏ.பி.செய்தியாளருக்கு வழங்கினார். தனது பேட்டியில் ஜனாதிபதி மேலும் கூறியிருப்பதாவது:- எனது பொறுமையை பலவீனமென யாரும் கருதிவிடக் கூடாது. இராணுவ ரீதியில் நாம் பலம் மிக்கவர்களாகவே இருக்கிறோம். நாம் உட்கார்ந்து பேச்சு நடத்தி அதன் மூலம் தீர்வுக்கான வழியைத் திறக்க வைப்போம். பின்னர் படிப்படியாக அந்த வழியில் சென்று பிரச்சினைக்குத் தீர்வு காண முயலுவோம். நான் விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கை கொள்ளவே விரும்புகிறேன். அவர்களுடைய கடந்தகால நடவடிக்கைகள் கசப்பான வையாக இருந்தாலும் நான் அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு செயற்பட விரும்புகிறேன். நம்பிக்கையைக் கட்டிவளர்ப்பதற்காக இந்தப் பேச்சை நாம் ஆரம்பிக்கலாம். பிரச்சினைக்குரிய விடயங்களை ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்வதற்கு முன்னர் இப்போது நடைபெறும் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

புலிகளை நான் நம்புவது போல் அவர்களும் எம்மீது நம்பிக்கை கொள்ளவேண்டும். நாங்கள் எல்லோரும் இலங்கையர். இந்த சின்னஞ் சிறிய நாட்டில் மீண்டுமொரு யுத்தம் வர நாம் அனுமதிக்க முடியாது. நான் பதவியேற்று மூன்று மாதம் கூட நிறைவேறவில்லை. ஆனால், புலிகள் எனக்கு மூச்சு விடத் தானும் கால அவகாசம் தரவில்லை. பேச் சுகள் ஆரம்பமாகி வன்முறைகள், கொலைகள் நிற்கும்போது பிரச்சினைக்குரிய விட யங்கள் ஒவ்வொன்றையும் பரிசீலனைக் கெடுத்து தீர்வு காண முயலுவோம். இதான் எனக்குள்ள ஒரே வழி. புலிகள் சுயாட்சி கோரி நிற்கின்றனர். அது அபரிதமானதாக [illegible]னறது. தீர்வை யாரும் புலிகளின் வாய்க்குள் திணிக்க முடியாது. அதேபோல எங்கள் தொண்டைக்குள்ளும் தீர்வு இப்படித்தான் இருக்க வேண்டுமென்று புலிகளால் திணிக்கமுடியாது. எனது நேரத்தின் பெரும் பகுதியை இந்தக் கொலைகள், தாக்குதல் விவகாரங்களிலேயே செலவிடுகிறேன். - இவ் வாறு மேலும் கூறினார் ஜனாதிபதி. (எ-க)

திருமலை சிவன்கோயிலில்

தேர்முட்டி 'கொங்கிரீட்' தளம் சரிந்ததில் 4 பேர் படுகாயம்

கட்ட இடியாடுகள் அகற்றப்பட்ட போது.....

திருகோணமலை சிவன் கோயிலில் தேர் நிறுத்துவதற்காக அமைக்கப்பட்டு வரும் தேர்முட்டியின் மேற்தளத்திற்கான கொங்கிரீட் கட்டமைப்பு சரிந்து, கொட்டுண்டதில் நால்வர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது. சுமார் நாற்பது அடி உயரத்தில் முப்பது அடிக்கு இருபதுஅடி என்ற விஸ்தீரண அளவில் கொங்கிரீட் தளம் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதே - நேற்று நண்பகல் அளவில் - அது சரிந்து கொட்டுண்டது.

சுமார் 25 தொன் எடை கொண்ட - பத்து 'கியூபிக்' அளவு - சீமெந்துக் கொங்கிரீட் கொட்டப்பட்ட நிலையில் அந்தத் தளத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்த முட்டுகள் பலமிழந்து சரிய, அமைக்கப்பட்ட முழுத் தளமும் - கொட்டப்பட்ட சீமெந்துக் கலவை மற்றும் கம்பிக் கட்டுகளோடு - நிலத்தில் வீழ்ந்து கொட்டுண்டது எனக் கூறப்படுகிறது. (ஐ-6-13)

சொல்ஹெய்முக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிநேரம் கழித்து - அதாவது இன்று காலை 6 மணியளவில் - நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட தூதுவரும் அந்த நாட்டின் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மும் கட்டுநாயக்கவில் வந்து இறங்குவார் எனக்கூறப்படுகின்றது.

ஆனால், இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்திலோ அல்லது அதை ஒட்டிய ஹோட்டலிலோ அன்ரன் பாலசிங்கம் - சொல்ஹெய்ம் சந்திப்பதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை. அதற்கான ஏற்பாடுகள் ஏதும் இருவரினதும் பயண ஒழுங்கில் இடம் பெறவில்லை என்று தெரிவித்த அதிகாரிகள், இருவரினதும் பயணத் திட்டங்கள் வெவ்வேறாகவும், தனித்தனியாகவும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன - என்றார். (எ-க)

பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனீவாவில் பேசுவதா, இல்லையா என்ற தீர்மானம் தலைவர் பிரபாகரனின் முடிவிலேயே தங்கியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

மரண அறிவித்தல்கள்

இளையதம்பி இராதாகிருஷ்ணன் (ராதா)

(ஓய்வுபெற்ற யாழ். உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்)

வடமராட்சி கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் துன்னாலை மேற்கு, கோவிற்கடவையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராதாகிருஷ்ணன் 21.01.2006 சனிக்கிழமை அகால மரணமானார். அன்னார் கொற்றாவத்தையைச் சேர்ந்த மலாயன்பென்சனியர் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் செல்லாச்சியின் அன்பு மருமகனும் கமலாவதியின் அன்புக் கணவரும் Dr. கேசவன் (மாகாணப் பொது வைத்தியசாலை, பதுளை), கடம்பன் (பொறி யியலாளர், லண்டன்), தனாளன், கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் மிதுலா, Dr. பிரேமிளா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிணியின் அன்புப் பாட்டனாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம், ஓய்வுபெற்ற Dr.பரமசிவம் புவனேஸ்வரி, செல்வராஜா (கனடா), இரா ஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), Dr. கனகரட்னம் (ஊர்காவற்றுறை கிராமிய வைத்தியசாலை), பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற யோகலிங்கம், சோமஸ்கந்தராஜா, கந்தசாமி (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்றப் பதிவாளர்), செல் வதி, தவனேஸ்வரி, நாகேஸ்வரி (கனடா), நளாயினி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2006) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் வேருண்டை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமரைக்குள வீதி, கோயிற்கடவை, துன்னாலை மேற்கு, கரவெட்டி. (சி47476)(17-34)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

திருமதி விஸ்வலிங்கம் கண்மணி

புங்குடுதீவு - 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரடியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் - கண்மணி நேற்று (22.01.2006) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2006) திங்கட்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 400, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். (45912)(17-34)

தகவல்: குடும்பத்தினர்.

கண்ணீர்ப் பூக்கள்

இளையதம்பி இராதாகிருஷ்ணன் (ராதா)

(பணிப்பாளர்- வீதித் தொழிநுட்பவியல் நிறுவனம், கிளிநொச்சி)

பொங்கும் கடலென புரட்சி ஒன்று
புறப்பட்ட வடமராட்சி மண்ணிலே
வந்துதித்த துன்னாலையின் தூய தீபமே!
தூங்காத உமது கண்களுக்கு கொடிய
வஞ்சகர் செய்த
வலை விரிப்பு இதுதானோ!
துட்டரின் கண்களுக்கு தெரியவில்லையா
நீர் ஓர் அப்பாவி என்று !
துவண்டு இருக்கின்றோம் ஐயா!
உமது கம்பிரப் பேச்சு எம் நினைவில் வர
நிமிர்ந்து எழுவோம் என்றும் உம் நினைவுடன்....

அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வீதித் தொழில்நுட்பவியல் நிறுவனம், (வரைவுள்ளது) கிளிநொச்சி. (சி47477)(17-34)

பணிப்பாளர், பொறியியலாளர்கள், பணியாளர்கள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் பருத்தித்துறை வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org